# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.03.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# உண்ணாட்டரசிறை (திருத்தம்)

***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 140.00** **தபாற் செலவு : ரூபா 55.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வருமான வரியைக் கணக்கிடும்போது பணிக்கொடை நிதியமொன்றுக்கு தொழில்தருநரினால் செய்யப்பட்ட உதவுதொகைகளைத் தவிர்ப்பதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது விளைவாந்தன்மையான திருத்தமொன்றைச் செய்வதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது 2018 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான வரி விலக்களிப்புக்களை வழங்குவதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது நிதிசார் நிறுவனங்களின் கடன்களின் ஆகுசெலவை அனுமதிக்கப்படற்பாலதான செலவொன்றாகக் கருதுவதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வருமான வரியைக் கணக்கிடுவதில் பழுதுபார்த்தற் செலவினத்தைக் கழிப்பனவொன்றாக அனுமதிப்பதாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம், சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடற் செலவினத்தை கழிப்பனவொன்றாக அனுமதிப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.

**வாசகம் 9** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது கம்பெனியொன்றின் நிதிசார் ஆகுசெலவின் கணக்கிடுதலை எளிமைப்படுத்துவதாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியொன்றின் நிவாரணமளிக்கப்படாத நட்டங்களை கழிப்பனவொன்றாக அனுமதிப்பதாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது நம்பிக்கைப் பொறுப்பொன்று அல்லது கம்பெனியொன்று அதனது கணக்கீட்டு ஆண்டை மாற்றுவதற்கு இயலச்செய்விப்பதாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வியாபாரச் சொத்துக்களின் ஆகுசெலவையும் பிரதிபயனையும் பிரிப்பதற்கு அனுமதிப்பதாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது சொத்தொன்றின் தேறிப்பெறப்படுதலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் மீதான வரியின் கணக்கிடுதலை எளிமைப்படுத்துவதாகும்.

***வாசகம் 15*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது பங்குடைமை வருமான வரியின் கணக்கிடுதலுக்காக ஏற்பாடு செய்வதாகும்.*

***வாசகம் 16*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது பங்குடைமை வரிக் கொடுப்பனவின் மீதான குறித்தசில மீளப்பெறுகைகளை அனுமதிக்காதுவிடுவதற்காகும்.*

***வாசகம் 17*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வியாபாரச் செயற்பாடுகள் பற்றிய வரிவிதிப்புக்கான அடிப்படையொன்றை ஏற்பாடு செய்வதாகும்.*

***வாசகம் 18*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வதிவற்ற ஆளொருவருக்கான அனுப்பிவைக்கப்பட்டதான இலாபங்களின் மீதான வரி விலக்களிப்புக்களை வழங்குவதாகும்.*

***வாசகம் 19*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவினது நோக்கெல்லையை அதிகரிப்பதாகும்.*

***வாசகம் 20*** : *இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 21*** : *இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 22*** : *இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 23*** : *இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 24*** : *இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 25*** : *இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

***வாசகம் 26*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது தொழில் வருமானத்தின் மீதான பிடித்துவைத்தலை இல்லாதொழிப்பதாகும்.*

***வாசகம் 27*** : *இவ்வாசகம், முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியை* (APIT) *அறிமுகப்படுத்துவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 83அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.*

***வாசகம் 28*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது லொத்தர், வெகுமதி முதலியவற்றிலிருந்தான வெற்றிகளிலிருந்தவை தவிர்ந்த முதலீட்டு விபரத்திரட்டுக்கள் மீதான பிடித்துவைத்தலை இல்லாதொழிப்பதாகும்.*

***வாசகம் 29*** : *இவ்வாசகம், முற்கூட்டிய வருமான வரியை* (AIT) *அறிமுகப்படுத்துவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 84அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.*

***வாசகம் 30*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வதிவுள்ளோருக்குச் செலுத்தப்பட்ட சேவை மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தலை அகற்றுவதாகும்.*

**வாசகம் 31** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 32** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையுமாகும்.

**வாசகம் 33** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 34** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது மாதாந்த அடிப்படையில் மூலதன ஈட்டுகைகள் வரி விபரத்திரட்டின் கோப்பிடுதலை தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 35** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது ஊழியர்களுக்குக் கட்டாயமான வருமான வரி விபரத்திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்துகின்றது.

**வாசகம் 36** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 37** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வரி தொடர்பிலான எல்லா ஆவணங்களிலும் வரி அடையாள இலக்கம் பயன்படுத்தப்படுவதனைத் தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 38** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது விபரத்திரட்டுக்களை இலத்திரனியல் ரீதியில் கோப்பிடுவதற்கு கம்பெனிகளைத் தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 39** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது தனிவேறான நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு வரி செலுத்துநர்களைத் தேவைப்படுத்துவதாகும்.

**வாசகம் 40** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 41** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவினது நோக்கெல்லையை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 42** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவினது நோக்கெல்லையை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 43** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவினது நோக்கெல்லையை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 44** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 45** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது வட்டியைக் கணிப்பிடுவதற்கான காலப்பகுதியை விசாலிப்பதாகும்.

**வாசகம் 46** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 47*** : இவ்வாசகம், கணக்காய்வாளர்கள் முதலியோர் தொடர்பில் தண்டிக்கும் ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 190அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 48*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது குறித்தசில புதிய வரைவிலக்கணங்களுக்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 49*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 201 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது ஆறாம் அட்டவணையின் நோக்கெல்லையை அதிகரிப்பதாகும்.

***வாசகம் 50*** : இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 203ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 51*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கு அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.

***வாசகம் 52*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கு அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.

***வாசகம் 53*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணையின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கு அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.

***வாசகம் 54*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் நான்காம் அட்டவணையின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கு அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.

***வாசகம் 55*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கு அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.

***வாசகம் 56*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஆறாம் அட்டவணையின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கு அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.

***வாசகம் 57*** : இவ்வாசகம், வருமான வரிக் கணிப்பீடுகள் மீதான வழிகாட்டுநெறிகளை வழங்குவதற்கான தத்துவங்களை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கின்றது.

***வாசகம் 58*** : இவ்வாசகம், கொவிட் 19 இற்குப் பின்னரான பொருளாதார மீட்பை வசதிப்படுத்துவதற்கு வரி நிவாரணங்களை வழங்குகின்றது.

***வாசகம் 59*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட குறித்தசில திருத்தங்களுக்கு கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் பயனைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 60*** : இவ்வாசகம், ஏலவே சேகரிக்கப்பட்ட வருமான வரியின் செல்லுபடியாகுந் தன்மைக்கு ஏற்பாடு செய்கின்றது.

ச.வ.-ஓ. 10/2020

### 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) (இத்திருத்தச் சட்டத்தில் தரப்பட்ட பட்டியல் அ மற்றும் பட்டியல் ஆ என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், எந்தத் தேதியில் சபாநாயகரின் சான்றிதழ் புறக்குறிப்பிடப்படுகின்றதோ அந்தத் தேதியில் தொடங்குதல் வேண்டும்.

(3) இத்திருத்தச் சட்டத்தில் தரப்பட்ட பட்டியல் அ இல் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இத்திருத்தச் சட்டத்தில் தரப்பட்ட பட்டியல் ஆ இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் அப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட அந்தந்தத் தேதிகளில் நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''(இ) சமமான நியதிகளின்மீது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(இ) சமமான நியதிகளின்மீது ஒரே தரத்திலான சேவையிலுள்ள'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், “சகாய அல்லது சேமிப்பு நிதியத்தில் அல்லது சேமிப்பு சங்கத்தில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சகாய, பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியத்தில் அல்லது சேமிப்பு சங்கத்தில்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், “இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின்மூலம்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘இச்சட்டத்துக்கான நான்காம் அட்டவணையின்மூலம்’’ என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "உடன்படிக்கையொன்றுக்கு ஏற்புடைய தாதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உடன்படிக்கை யொன்றுக்கு அல்லது 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாதலாகாது." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (V) ஆம் உட்பந்தியில், ‘‘சகாய அல்லது சேமிப்பு நிதியமொன்றுக்கு’’; என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சகாய, பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியமொன்றுக்கு” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, தொழில்நுட்பம் அத்துடன் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி எண்ணக்கருவின்கீழ் (TVET எண்ணக்கரு) தரப்படுத்தப்பட்டதும் மூன்றாம்நிலை

மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்கு படுத்தப்பட்டதுமான ஏதேனும் தொழிற்கல்வி நிறுவனத்தி லிருந்து தொழிற்கல்வியை வெற்றிகரமாக நிறைவுசெய்த பின்னர் எவரேனும் தனியாளினால் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் அல்லது அதற்குப் பின்னர் தொடங்கப்பட்ட புதிய தொழில்களுக்காக வழங்கப்பட்ட கடன்களின்மீது உறப்பட்ட நிதிகளின் ஆகுசெலவானது அத்தகைய நிதி நிறுவனங்களின் வருமானத்தைத் தோற்றுவிப்பதில் உறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) “ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வழங்கப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கழிப்பனவுகள்” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, " 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக வழங்கப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சீராக்கல்களின் கழிப்பனவுகள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் உட்பந்தி (i) இல், "பழுது பார்த்தலின் அல்லது சீராக்கலின் விடயத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சீராக்கலின் விடயத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்,"(நான்காம் அட்டவணையின் பந்தி (3))." என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(நான்காம் அட்டவணையின் 3 ஆம் பந்தி)." என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும்:-

"(4) இப்பிரிவில்,"சீராக்கல்" என்பது தேய்மானத்துக் குட்படத்தக்க சொத்தொன்றின் பெறுமதியை அதிகரிக்கின்ற அத்தகைய சொத்தொன்றுக்கான சேர்த்தல்கள் அல்லது மாற்றங்களைச் செய்வதற்கு ஆளொருவரினால் உறப்பட்ட செலவினம் என்று பொருள்படும்; ஆனாலும், தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தின் பெறுமதியைத் தற்காலிகமாக அதிகரிக்கின்ற அத்தகைய சொத்தொன்றின் பராமரித்தல் அல்லது பழுதுபார்த்தலுக்காக உறப்பட்ட செலவினத்தைத் தவிர்க்கின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 15அ என்றவாறாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"சந்தைப் படுத்தற் தொடர்பாடல் செலவுகள்

15அ. (1) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, தொழிலொன்றிலிருந்தான ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் வரிமதிப்பீட்டாண்டின் போது வருமானத் தோற்றுவாயில் எவரேனும் ஆளினால் உறப்பட்ட சந்தைப்படுத்தற் தொடர்பாடல் செலவுகள், அவை மூலதனத் தன்மையினவாக இருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி அதனைப் பொருட்படுத்தாது, கழிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில், "சந்தைப்படுத்தற் தொடர்பாடல் செலவுகள்" என்பது அத்தகைய ஆளொருவரினால் பின்வருவனவற்றில் உறப்பட்ட எவையேனும் செலவுகள் எனப் பொருள்படும் -

(அ) அத்தகைய ஆளினால் அல்லது அவர் சார்பில் இலங்கையிலுள்ள ஏதேனும் நிறுவனத்தினால் சந்தை ஆராய்ச்சியொன்றை நிறைவேற்றுதல்;

(ஆ) சந்தைப்படுத்தல், விளம்பரப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் பிரசாரம் பற்றிய விருத்தி மற்றும் தயாரிப்பு இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள அளவுவரை அத்தகைய விருத்தி அல்லது தயாரிப்பு;

(இ) தொலைக்காட்சி, வானொலி, அச்சு அல்லது வெளிக்கள விளம்பரப்படுத்தல் உள்ளடங்கலாக பிரதான ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் மீதான விளம்பரப்படுத்தல்;

(ஈ) அத்தகைய ஆளினால் அல்லது அவர் சார்பில் ஏதேனும் உள்நாட்டு நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்ட தயாரிப்புப் பொருள் வெளிக்கொணர்கை அல்லது பிரசாரச் செயற்படுத்துகை;

(உ) அத்தகைய ஆளினால் அல்லது அவர் சார்பில் ஏதேனும் உள்நாட்டு நிறுவனத்தினால் விற்பனை இடத்திலுள்ள பொருட்களின் விருத்தி மற்றும் அச்சிடுதல்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இச்சட்டத்துக்கான இரண்டாம், நான்காம் அல்லது ஆறாம் அட்டவணையின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான நான்காம் அட்டவணையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவையும் (2) ஆம் உட்பிரிவையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப்பதிலாக, பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) 2021, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒன்றுக்காக வியாபாரமொன்றை அல்லது முதலீடொன்றை நடாத்துவதிலிருந்து, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதும் வரிமதிப்பீட்டாண்டு எத்தேதியில் முடிவடைகின்றதோ அத்தேதியில் வழங்கப்பட்ட பங்குமூலதனமொன்றைக் கொண்டுள்ளதுமான (நிதிசார் நிறுவனமொன்று தவிர்ந்த) கம்பெனியொன்றின் வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிக்கப்பட்ட நிதிசார் ஆகுசெலவுகளின் தொகை (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வரையறையை விஞ்சுதலாகாது.

(2) அவ்வரையறையானது பின்வரும் சூத்திரத்திற் கிணங்க கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்:-

$$\frac{A}{B} \times C$$

இங்கு :

'A' என்பது= ஆண்டின் நிதிசார் ஆகுசெலவு;

'B' என்பது = ஆண்டின் எந்த நிதிசார் சாதனங்களின்மீது நிதிசார் ஆகுசெலவு உறப்பட்டதோ அந்த நிதிசார் சாதனங்களின் பெறுமதி; அத்துடன்

'C' என்பது = 4 × ஆண்டின் முடிவிலுள்ளவாறு கம்பெனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தினதும் ஒதுக்குகளினதும் மொத்தம்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "நட்டமானது கழிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"நட்டமானது கழிக்கப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, ஏதேனும் கம்பெனி சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியொன்றாக எக்காலப்பகுதியிலிருந்து தொழிற்பட்டிருந்ததோ அக்காலப்பகுதியிலிருந்து நடப்பு வரிமதிப்பீட்டாண்டில் கழிப்பதற்கு வியாபாரத்திலிருந்தான கழிக்கப்படாத நட்டமொன்றை அவ்வேறேதேனும் கம்பெனி கொண்டுள்ளவிடத்தும், அத்துடன் -

(அ) அக்கழிக்கப்படாத நட்டம், அது எந்த வரிமதிப் பீட்டாண்டில் உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டி லான இலாபமொன்றாகவும் குறைக்கப்பட்ட வீதமொன்றில் வரிவிதிக்கப்படக்கூடியதாகவும் இருந்திருப்பின்; அத்துடன்

(ஆ) நடப்பாண்டு வியாபார வருமானமானது, (அ) என்னும் உப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆண்டில் போன்று அதே குறைக்கப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படற் பாலதாக இருந்திருப்பின்,

அக்கழிக்கப்பட்ட நட்டமானது, (ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கமைய) நடப்பாண்டின் அதே விதத்தில் வரிவிதிக்கப்பட்ட நட்டமொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் (அது வரிமதிப்பிடற்பாலதான இலாபமொன்றாக இருந்திருப்பின்).".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) நம்பிக்கைப்பொறுப்பொன்று அல்லது கம்பெனியொன்று, (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக வரிமதிப்பீட்டாண்டொன்றின் பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்காக கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு இயலாததாக இருக்கின்றவிடத்து, அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பெனி பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட மாற்றுக் காலப்பகுதி யொன்றை அடிப்படையாகக்கொண்ட கணக்குகளை, கொடுக்கப்பட்ட வரிமதிப்பீட் டாண்டொன்றுக்காகச் செலுத்தப்படற்பாலதான வருமான வரியைக் கணிப்பீடு செய்வதில் பயன்படுத்தப்பட வேண்டும் எனக்கோரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்க லாம். ஆணையாளர் தலைமையதிபதி, அவர் தகுதி எனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது, அத்தகைய கோரிக்கையை அங்கீகரிக்கலாம். அங்கீகாரத்துடன் இணைந்த நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பெனி தவறினால், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய அங்கீகாரத்தை இல்லாதொழிக்க லாம்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஒரு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது கம்பெனியின் வரிமதிப்பீட்டாண்டி லான மாற்றம், அந்நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பெனி அத்தியாயம் VIII இன் கீழ் தவணைப் பணங்களின் மூலமும் வரிமதிப்பீட்டின்மீதும் வரி செலுத்தவேண்டிய காலத்தை மாற்றியமைப்பதனை விளைவித்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "இரண்டாம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது கம்பெனியின் வரிமதிப்பீட்டிலான மாற்றம், நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பெனி அத்தியாயம் VIII இன்கீழ்

தவணைப்பணங்களின் மூலமும் வரிமதிப்பீட்டின்மீதும் வரிசெலுத்தவேண்டிய காலத்தை மாற்றியமைப்பதனை விளைவித்தலாகாது" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்பிற்கு பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :-

"வரிமதிப்பீட்டாண்டு.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(5) ஆளொருவரினால், 2021, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்தொன்று, (நட்டங்கள் உள்ளடங்கலாக) வெவ்வேறுபட்ட விகிதங்களில் வரிசெலுத்தப்படற்பாலதான வியாபாரத்திலிருந்தான வெவ்வேறுபட்ட ஈட்டுகைகளினதும் இலாபங்களினதும் தோற்றுவிப்பில் பயன்படுத்தப்படுமிடத்து, அச்சொத்துக்காகப் பெறப்பட்ட ஆகுசெலவு மற்றும் பிரதிபயனானது, அந்தந்த ஈட்டுகைகளையும் இலாபங்களையும் தோற்றுவிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களின் பாகங்களின் சந்தைப் பெறுமதிக்கிணங்க அத்தகைய ஈட்டுகைகள் அல்லது இலாபங்களுக்கிடையே பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(1அ) ஓராம் உட்பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆளொருவரின் முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறப்படுதலுக்காகப் பெறப்பட்ட பிரதிபயனானது, அத்தகைய சொத்துத் தொடர்பில் அவ்வாளினால் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான தொகை அல்லது

தேறிப்பெறப்படுதலின்போது மதிப்பிடப்பட்ட பெறுமதி, இவற்றுள் எத்தொகை உயர்வாகவுள்ளதோ அத்தொகையாக இருத்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், மதிப்பிடப்பட்ட பெறுமதியானது சொத்தொன்றின் சந்தைப்பெறுமதியை சுட்டிக்காட்ட வில்லையென வரி அலுவலரொருவர் அபிப்பிராயப்படின், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய சொத்தொன்றுக்காகப் பெறப்பட்ட பிரதிபயனை அத்தகைய வரி அலுவலர் தீர்மானிக்கலாம்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக,"மதிப்பிடப்பட்ட பெறுமதி" என்பது பெறுமான மதிப்பீட்டு அறிக்கையொன்றில் உயர்தொழில் ரீதியில் தகைமைபெற்ற பெறுமதியான மதிப்பீட்டாளரொருவரினால் சான்றுப்படுத்தப்பட்டதும், தேறிப்பெறப்பட்ட நேரத்திலானதுமான பெறுமதி எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பங்குடைமை ஒன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் பங்குடைமை ஒன்று" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) பங்குடைமை ஒவ்வொன்றும், அதன் பங்காளர்களிலிருந்து தனிவேறாக, இச்சட்டத்துக் கான முதலாம் அட்டவணையின் 2 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட வீதத்தில் 2020, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து வருமான வரி செலுத்தப்படு வதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில், "முந்தைய பங்காளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 2 ஆந் தேதிக்கு முன்னர் முந்தைய பங்காளர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(10) பங்குடைமையொன்றின் ஒவ்வொரு பங்காளரும், அப்பங்குடைமையினால் செலுத்தப் படற்பாலதான வருமான வரி தொடர்பில் அதன்மீது இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையை அல்லது கடப்பாட்டை நிறைவேற்று வதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "அவர்களினால் செலுத்தப்பட்டதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய பங்காளருக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அத்தகைய வரிப் பங்கின் ஏதேனும் விஞ்சுகையின் மீள் கொடுப்பனவுக்கான உரிமை எதுவுமின்றி (ஆனால் அடுத்ததாகவுள்ள அடுத்துறும் ஆண்டில் கழிப்பதற்கென அவ்வாண்டுக்கு முன்கொண்டு செல்வதற்கான உரிமையொன்றுடன்) அவர்களினால் செலுத்தப் பட்டதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஒரு தனிக் கம்பெனி வியாபாரத்தின்போது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறுபட்ட செயற்பாடுகளுக்கும் வருமான மூலங்களுக்கும் வேறுபட்ட வரி வீதங்கள் ஏற்புடையற் பாலனவாக இருந்தாலொழிய, ஒரு தனிக் கம்பெனி வியாபாரம்; அவ்விடயத்தில் அத்தகைய ஒவ்வொரு செயற்பாடும் மூலமும் தனிவேறான வியாபாரங்களாகவும் மூலங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இறுதிவரியொன்றைச் செலுத்துதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்

"இறுதிவரியொன்றைச் செலுத்துதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், வருமானமானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் ஈட்டப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து வருகின்ற ஆண்டின் முதலாவது நாளிலிருந்து தொடங்குகின்றதும், குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் 2021, ஏப்பிறல் 01 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஈடுபட்டதுமான மொத்த வருமானத்தை வதிவற்ற ஆளொருவர் வைத்திருந்து மற்றும் அதன் வியாபாரத்தை விசாலிப்பதற்கு அல்லது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையிலிருந்து பங்குகள் அல்லது பிணையங்களைக் கொள்வதற்கு அல்லது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட ஏதேனும் திறைசேரி உண்டியலை, திறைசேரி முறியை அல்லது இலங்கை சர்வதேச தங்க முறிகளைக் கொள்வதற்கு இலங்கையில் அதனை முதலீடு செய்திருந்தால், முதலீடு செய்யப்பட்ட அத்தகைய வைத்திருக்கப்பட்ட வருமானத்தின் மீதான வரி வீதம் பூச்சியம் சதவீதமாக இருத்தல் வேண்டும்.".

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அத்தகைய நிதி ஏற்பாட்டைக் கழித்தலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"அத்தகைய நிதி ஏற்பாட்டைக் கழித்தலாகாது:

ஆயின், கழிப்பனவு என்றவாறாக கடன் கோரிக்கையொன்றுக்காக முன்னரே அங்கீகரிக் கப்பட்ட குறிப்பான ஏற்பாடு முழுமையாக அல்லது பகுதியாக, ஆண்டின்போது எதிர்மாறாக்கப் பட்டுள்ளவிடத்து அல்லது செலுத்தப்பட் டுள்ளவிடத்து, அவ்வாறு எதிர்மாறாக்கப்பட்ட, குறைக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட தொகை யானது அத்தகைய ஆளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(3) வங்கித்தொழில் வியாபாரமொன்றை நடாத்துகின்ற ஆளொருவர், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் குறித்துரைக்கப்பட்ட வாறாகத் தயாரிக்கப்பட வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட பதிவேடுகள், கணக்குகள் அல்லது வேறேதேனும் ஆவணத்துக்கு மேலதிகமாக, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில், கடன் கோரிக்கையொன்றுக்கான குறிப்பான ஏற்பாடு தொடர்பிலான பதிவேடு களைத் தயாரித்து வைத்திருத்தல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும் :-

"(4) இப்பிரிவில் -

(அ) "வங்கித்தொழில் வியாபாரம்" என்பது, நிதி நிறுவனமொன்றின் வங்கித்தொழில் வியாபாரம் எனப் பொருள்படும்;

(ஆ) "கடன் கோரிக்கை" என்பது, வைப்புகள், தொகுதிக்கடன்கள், கையிருப்புகள், திறைசேரி உண்டியல்கள், வாக்குறுதிப்

*பத்திரங்கள், மாற்றுண்டியல்கள் மற்றும் முறிகள் என்பன மீதான கொடுப்பன வொன்றைப் பெறுவதற்கான உரிமையை உள்ளடக்குவதில்லை;*

(இ) *"இலங்கை மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட பணிப்புரைகள்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள் தொடர்பில் குறிப்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கென இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டதும், இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு ஏற்புடையற்பாலதானதும் ஆனால் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் ஏற்புத் தொடர்பில் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகள் தவிர்ந்தது மான எவையேனும் பணிப்புரைகள் எனப் பொருள்படும்.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**20**. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "தொகைகளின் மூன்று சதவீதத்தின்மீதான மேலதிக வரியைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொகைகளின் மூன்று சதவீதத்தின்மேல் மேலதிக வரியைச்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்,"பிரிவு 69 இன் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 69 இன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1)(அ) பாராளுமன்றமானது, இலங்கை அரசாங்கத்துக்கும் வேறு ஏதேனும் ஆள்புலத்தின் அரசாங்கத்துக்கும் இடையே சொல்லப்பட்ட ஏதேனும் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கையை அல்லது பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கையை அல்லது அத்தகைய உடன்படிக்கை வேறு எவையேனும் ஆள்புலங்களின் அரசாங்கங்களுடனும் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்டதனை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய உடன்படிக்கையானது, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இலங்கையில் சட்ட வலுவைக் கொண்டிருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தினால் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய தீர்மானம் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆ) இலங்கை அரசாங்கத்துக்கும் வேறேதேனும் ஆள்புலத்தின் அரசாங்கத்துக்குமிடையே செய்யப்பட்டதும், 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச்

சட்டத்தின் 82 ஆம் பிரிவின் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் அல்லது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு இலங்கையில் சட்டவலுவைக் கொண்டுள்ளதுமான ஒவ்வோர் உடன்படிக்கையும், எல்லா நோக்கங்களுக்காகவும், இவ்வுட்பிரிவின் பந்தி (அ) இன்கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கையொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "இரட்டை வரிவிதிப்பைத் தவிர்த்தல் மற்றும் அரசின் நிதித்தடுத்தல் தொடர்பிலான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைச் சட்டத்தின்கீழ் வருமான வரி தொடர்பில் இரட்டை வரிவிதிப்பிலிருந்தும் அவ்வாள்புலத்தின் சட்டங்களினால் விதிக்கப்பட்ட அதே பண்பினதான எவையேனும் வரிகளிலிருந்தும் நிவாரணமளிக்கும் நோக்கத்துக்கானதும் நிதித்தடுத்தல் தொடர்பிலானதுமான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.".

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஆ) இரட்டை வரிவிதிப்பு தவிர்த்தல்மீது உடன்படிக்கையொன்றைச் செய்திருக்கின்ற நாடொன்று தொடர்பிலான "நிரந்தர தாபனம்" என்பது, இலங்கை அரசாங்கத்திற்

கும் இலங்கையில் எவரேனுமாள் அத்துடன் அவரது முகவர்கள், கிளைகள் அல்லது தாபனங்கள் வதிவிலுள்ள ஏதேனும் ஆள்புலத்தின் அரசாங்கத்திற்கும் இடையே உடன்படிக்கையொன்று வலுவிலுள்ளவிடத்து, இரட்டை வரிவிதிப்பு நிவாரணத்திற்கான உடன்படிக்கையொன்றில் வரைவிலக்கணம் கூறப்பட்ட ஒரு நிரந்தர தாபனம் எனப் பொருள்படும்.";

(ஆ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "இலங்கையிலுள்ள அதன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையில் அல்லது வேறெங்கேனு முள்ள அதன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில்,"உட்பிரிவு 2 இன் (அ) மற்றும் (ஆ) பந்திகளின்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக,"உட்பிரிவு (3) இன் (அ) மற்றும் (ஆ) பந்திகளின்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில் -

(i) "கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை உறுதிப்படுத்தி குறைத்து அல்லது அதிகரித்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை உறுதிப்படுத்தி குறைத்து, அதிகரித்து அல்லது வறிதாக்கி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அப்பந்தியின் (i) மற்றும் (ii) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் விடயங்களை இடுவதன் மூலமும் :-

"(i) குழுவின் எல்லா உறுப்பினர்களும் உடன்படுகின்றவிடத்து, இடைக்காலக் கட்டளையொன்று; அல்லது

(ii) குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் உடன்படுகின்ற விடத்து, இடைக்காலக் கட்டளை யொன்று.";

(இ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில், "ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்றின் பங்காளர் பெற்றுக்கொண்ட இடைக்காலக் கட்டளையொன்றின் மீதான அவருடைய அல்லது அதனது அதிருப்தியை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆளொருவர், பெற்றுக்கொண்ட இடைக்காலக் கட்டளையொன்றின் மீதான அவருடைய அதிருப்தியை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில்,"அத்தகைய ஆள் அல்லது பங்குடைமையின் பங்காளர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆள்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில்,"(2) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(3) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் விடயம் (ii) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(ii) வேறு ஏதேனும் சூழ்நிலைகளில் குழுவின் பெரும்பாண்மையான உறுப்பினர்கள் உடன்படுகின்றவிடத்து, இடைக்காலக் கட்டளையொன்று.";

(ஆ) அவ்வுட்பிரிவின் பந்தி (எ) இல்,"அத்தகைய ஆளுக்கு அல்லது அத்தகைய பங்குடைமையின் பங்காளருக்கு என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் பந்தி (உ) இல், "தொடர்புபடுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**25.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்,"கைமாற்றல் விலையிடுதல் அலுவலரினால் அல்லது உதவி ஆணையாளரினால் ஆக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவினால் ஆக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**26**. முதன்மைச்சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வரியைப் பிடித்துவைக்கவேண்டிய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர் வரியைப் பிடித்துவைக்க வேண்டிய" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அப்பிரிவு அச்சட்டவாக்கத்தின் 83அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரி

83அ. (1) தொழில்தருநரொருவர், அவரது ஊழியர்-

(அ) வதிவற்ற ஒருவராக அல்லது இலங்கைப் பிரசையல்லாத ஒருவராக இருப்பின்; அல்லது

(ஆ) அவரது சம்மதத்தை அளிக்கின்ற இலங்கையில் வதிவுள்ள ஒருவராகவும் இலங்கைப் பிரசையாகவும் இருப்பின்-

அத்தகைய ஊழியருக்குச் செய்யப்பட்டதும் 5 ஆம் பிரிவின் கீழ் வருகின்றதுமான ஏதேனும் கொடுப்பனவின் மீது 2020, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையில் முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரியை ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வாறாகக் கழித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வரியைப்பிடித்து வைப்பதற்கு தொழில்தருநர் ஒருவருக்குள்ள கடப்பாடானது பின்வரும் சந்தர்ப்பங்களின்போது குறைக்கப்படுதல் அல்லது ஒழிக்கப்படுதலாகாது —

(அ) தொழில்தருநர், கொடுப்பனவிலிருந்து வேறு ஏதேனும் தொகையை கழிப்பதற்கும் பிடித்துவைப்பதற்குமான உரிமையொன்றைக்

கொண்டிருத்தல் அல்லது அவற்றுக்கான கடப்பாடொன்றின்கீழ் இருக்கும் போது; அல்லது

(ஆ) ஊழியத்திலிருந்தான ஊழியர் ஒருவரின் வருமானமானது குறைக்கப்படுதலாகாது அல்லது நடுக்கட்டலுக்கு அமைவானது என வேறு ஏதேனும் சட்டம் ஏற்பாடு செய்துள்ள போது.

(3) இச்சட்டத்தின்கீழான பிடித்துவைத்தல் வரிக்கு ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகள் முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரிக்கு, ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளிலுள்ள "பிடித்துவைத்தல்", "பிடித்துவைத்தல்வரி" அல்லது "பிடித்துவைத்தல்மூலம் செலுத்தப்படற்பாலதான வரி" என்பவற்றுக்கான ஒவ்வொரு குறிப்பீடும், அத்தகைய திரிபுபடுத்தலுக்கமைய, "முற்கூட்டிய தனிப்பட்ட வருமான வரி" என்பதற்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "இளைப்பாறுகைக் கொடுப்பனவொன்றைச் செலுத்துதல் அல்லது லொத்தர், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஒன்றிலிருந்தான வெற்றிகளான தொகைகளைச் செலுத்துமிடத்து; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"இளைப்பாறுகைக் கொடுப்பனவொன்றை, 2020, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர் செலுத்துமிடத்து; அல்லது";

(2) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ii) லொத்தர், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஒன்றிலிருந்தான வெற்றிகளான தொகைகளைச் செலுத்துமிடத்து; அல்லது;";

(3) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(4) அப்பந்தியின் மீள இலக்கமிடப்பட்ட (iii) ஆம் உட்பந்தியில், "இலங்கையிலுள்ள பங்குடைமையின் முகவராக இருக்குமிடத்து; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் இலங்கையிலுள்ள பங்குடைமையின் முகவராக இருக்குமிடத்து; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 84அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அப்பிரிவு அச்சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"*முற்கூட்டிய வருமான வரி.*

84அ. (1) 2020, ஏப்பிறல் 1 ஆந்தேதியிலிருந்து பயனுறும் வகையிலான 83அ என்னும் பிரிவுக்கும் 84 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கும் அமைய, இலங்கையில் வதிவுள்ளவராகவுள்ள வரிசெலுத்துநர், கொடுப்பனவு அல்லது குறித்தொதுக்குகை இலங்கையில் மூலமொன்றாக உள்ளதாகக்கூறி பங்கிலாபம், வட்டி, கழிப்பனவு, விதிப்பனவு, இயற்கை வளக் கொடுப்பனவு, வாடகை, அரசுரிமைப்பணம், கட்டுப்பணம் ஆகிய கொடுப்பனவிலிருந்து அல்லது அவற்றையொத்த காலாகாலக் கொடுப்பனவிலிருந்து முற்கூட்டிய வருமான வரியைக் கழிப்பதற்கான வேண்டுகோள்

ஒன்றை பிடித்துவைத்தல் முகவருக்குச் செய்யலாம். அத்தகைய வேண்டுகோள் பெறப்பட்டதன்மீது, பிடித்துவைத்தல் முகவரொருவர் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வாறாக முற்கூட்டிய வருமான வரியைக் கழித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான பிடித்துவைத்தல் வரிக்கு ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகள் முற்கூட்டிய வருமான வரிக்கு, ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் அத்தகைய எவையேனும் ஏற்பாடுகளிலுள்ள "பிடித்துவைத்தல்", "பிடித்துவைத்தல் வரி" அல்லது "பிடித்துவைத்தல் மூலம் செலுத்தப்படற்பாலதான வரி" என்பவற்றுக்கான ஒவ்வொரு குறிப்பீடும், அத்தகைய திரிபுபடுத்தலுக்கமைய, "முற்கூட்டிய வருமான வரி" என்பதற்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**30**. முதன்மைச்சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) இற்கமைய, இலங்கையிலுள்ள ஒரு மூலத்துடன் ஆளொருவர் வதிவற்ற ஆளொருவருக்கு ஒரு பங்கிலாபத்தை, வட்டியை, கழிவை, விதிப்பனவை, இயற்கைவளக் கொடுப்பனவை, வாடகையை, அரசுரிமைப்

பணத்தை, கட்டுப்பணத்தை, ஒரு சேவைக் கட்டணத்தை அல்லது ஒரு காப்புறுதிக் கட்டுப் பணத்தைச் செலுத்துமிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட வீதத்தில் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "கட்டணங்களில் இருந்தும் ஒப்பந்தக் கொடுப்பனவுகளில் இருந்துமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வதிவற்றோருக்கான கட்டணங்களில் இருந்தும் ஒப்பந்தக் கொடுப்பனவுகளில் இருந்தும் கொடுப்பனவுகளில் இருந்துமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துதல்

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அவ்வாண்டின் ஏப்பிறல் மாதத்தின் பதின்மூன்றாம் நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அடுத்துப்பின்வரும் ஆண்டின் ஏப்பிறல் மாதத்தின் முப்பதாம் நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "பின்வருவன இறுதிப் பிடித்துவைத்தற் செலுத்துகைகளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக,"பின்வருவன, 2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர், இறுதிப் பிடித்துவைத்தற் செலுத்துகைகளாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில்,"84 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும்

பதிலாக,"84 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வருவன 2020, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இறுதிப் பிடித்துவைத்தற் கொடுப்பனவுகளாக இருத்தல் வேண்டும்:-

(அ) பந்தயம் மற்றும் சூதாட்டம் என்பவற்றைக் கொண்டுள்ள வியாபாரமொன்றை நடாத்துவதில் பெறப்பட்ட தொகைகள் தவிர, லொத்தர், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஒன்றிலிருந்தான வெற்றிகளாகச் செலுத்தப்பட்ட தொகை;

(ஆ) இலங்கையின் நிரந்தர தாபனமொன்றுக் கூடாகப் பெறப்பட்ட வேறு கொடுப்பனவுகள் தவிர, இலங்கைப் பிரசையல்லாத வதிவற்ற ஆளொருவருக்கு அல்லது இப்பிரிவின் கீழான பிடித்துவைத்தலுக்கமைந்த வதிவற்ற உருவகமொன்றுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்; அத்துடன்

(இ) இலங்கைப் பிரசையொருவராகவுள்ள வதிவற்ற தனியாள் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட அல்லது அவரினால் பெறப்படுவதாகக் கருதப்பட்ட வட்டி:

ஆயின் எவ்வாறாயினும், பின்வரும் வட்டித்தொகைகள், இலங்கைப் பிரசையொருவராகவுள்ள அத்தகைய

வதிவற்ற தனியாளுக்கான இறுதிப் பிடித்துவைத்தற் கொடுப்பனவுகளாகக் கருதப்படுதலாகாது:-

(i) இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையின் 2 (அ) என்னும் பந்தியிலுள்ள நிவாரண எல்லையினுள் வருகின்றதும் செலுத்தப்பட்டதுமான அத்தகைய வட்டித்தொகை; அல்லது

(ii) வேறு மூலங்களிலிருந்தான மொத்த வரிமதிப்பிடற்பாலதான வருமானம் நிவாரண எல்லையை விஞ்சாதிருப்பின், நிவாரண எல்லையிலிருந்து வரிமதிப்பிடற் பாலதான வருமானத்தின் மூலங்களின் மொத்தத்தைக் கழிப்பதன் மூலம் (வட்டி தவிர்ந்த மொத்த வரிமதிப்பிடற்பாலதான வருமானம்) கணக்கிடப்பட்ட அத்தகைய தொகை.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "பிரிவு 84 இன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 84 இன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (ஈ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துதல்

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்,"வியாபாரம் அல்லது முதலீடு ஒன்றிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வியாபாரம், முதலீடு அல்லது வேறு வருமானம் ஒன்றிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) தவணைப்பணம் செலுத்துநரொருவர் வரிமதிப்பீட்டாண்டுக்கான வரியின் தவணைப் பணங்களை முறையே அவ்வரிமதிப்பீட்டாண்டின் ஓகத்து, நவெம்பர் மற்றும் பெப்ருவரி மாதங்களின் பதினைந்தாம் நாளில் அல்லது அதற்கு முன்னரும் அடுத்துப்பின்வரும் வரிமதிப்பீட்டாண்டின் மே மாதத்தின் பதினைந்தாம் நாளில் அல்லது அதற்கு முன்னரும் செலுத்துதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்,"உட்பிரிவுக்கிணங்க செலுத்தப்பட்டவரி." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"உட்பிரிவுக்கிணங்க செலுத்தப்பட்ட வரி:

ஆயின் எவ்வாறாயினும், தவணைப்பணம் செலுத்துநரொருவரினால் செலுத்தப்படற்பால தான மதிப்பிடப்பட்ட வரியைக் கணக்கிடுவதில், வரிமதிப்பீட்டாண்டுக்காக தொழில்தருநரொரு வரினால் கழிக்கப்பட்ட அல்லது கழிக்கப்படவுள்ள முற்கூட்டிய தனிப்பட்ட வருமானவரி இவ்வுட்பிரிவில் தரப்பட்டுள்ள சூத்திரத்தைப் பிரயோகிப்பதற்கு முன்னர் கழிக்கப்படலாம்.";

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "உரித்துடையவராக் கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். 55 ஆம் பிரிவில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பி னும் (மீளளிப்புக்கான ஏதேனும் உரிமையின்றி), பங்குடைமையிலுள்ள பங்காளரொருவர், அப்பங்காளரினால் செலுத்தப்பட்டதாகக்

கருதப்பட்ட வரிவரவுத் தொகையின் அத்தகைய பங்குக்காக செலுத்தப்படற்பாலதான வரியின் நடப்பு தவணைப்பணத் தொகையைக் கணக்கிடுவதில், ஆனால் பங்குடைமையிலிருந்து வருமதியான அதே தவணைப் பணத்தின் கொடுப்பனவுக்கமைய, வரி வரவுத்தொகை யொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துதல்

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் உட்பந்தி (i) இல், "வியாபாரம் மற்றும் முதலீட்டி லிருந்து"என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வியாபாரம், முதலீடு மற்றும் வேறு வருமானத்திலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(3) முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறப் படுவதிலிருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்கியுள்ள வரிமதிப்பிடப்படற்பாலதான வருமானத்தைக் கொண்டுள்ள ஒவ்வோராளும், எந்த இயைபான பஞ்சாங்க மாதத்தில் தேறிப்பெறப்படுதல் இடம்பெற்றதோ அந்த இயைபான பஞ்சாங்க மாதம் முடிவடைந்த திலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதியிடத்தில் மூலதன ஈட்டுகைகள் பற்றிய வரி விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) 5 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "83 ஆம் பிரிவின்கீழான பிடித்து வைத்தலுக்கமைய;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் 83 ஆம் பிரிவின்கீழான பிடித்துவைத்தலுக்கமைய;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவானது "வேண்டும்." என்னும் சொல்லுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், அதே வரிமதிப்பீட்டாண்டிற்கு 93 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வருமான விபரத்திரட்டொன்றை கோப்பிடுவதற்கு தேவைப்படுத்துகின்ற வரிசெலுத்துநர், சுயவரி மதிப்பீடொன்றின்மூலம் வரிமதிப்பீட்டாண்டு காலப்பகுதியின் போது பெறப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதனச் சொத்தொன்றின் தேறிப்பெறப்படுவதிலிருந்தான எவையேனும் ஈட்டுகைகள் தொடர்பில் கோப்பிடப்பட்ட மூலதன ஈட்டுகைகள் பற்றிய வரி விபரத்திட்டுகள் சுய வரிமதிப்பீடொன்றாயமைதல் ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் "இச்சட்டத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தினதும் வரிசெலுத்துநரின் மற்றும் எல்லா வரிதொடர்புபட்ட மூல ஆவணங்களிலும் அல்லது அடிப்படையான ஆவணங்களிலும் மற்றும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் "இச்சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உட்பிரிவு (1அ) விற்கு அமைய இச்சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்று கணனி முறைமையொன்றின் அல்லது செல்லிட இலத்திரனியற் சாதனமொன்றின் பயன்பாட்டினூடாக இலத்திரனியல் முறையில் மட்டும் அதனது வரி விபரத்திரட்டுகளை கோப்பிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ) இருபதாயிரத்து இருபத்தோராம் ஆண்டின் ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து பயனுறும் வகையில் எவரேனும் ஆள் வியாபாரத்தில் அல்லது முதலீட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்குமிடத்தும், வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் விடயத்திற்கு ஏற்ப வியாபாரம் அல்லது முதலீட்டுச் செயற்பாட்டிலிருந்தான எவையேனும் ஈட்டுகைகளிலிருந்தும் மற்றும் இலாபங்களிலிருந்தும் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்திற்கு வெவ்வேறு வரிவீதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் கணிப்பிடப்பட வேண்டியதாக அல்லது விலக்களிக்கப்பட்ட தொகைகளைக் கொண்டிருக்கும் போது, அத்தகைய ஆள் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் ஒவ்வொரு பாகத்திற்குமான ஒவ்வொரு வருமானவரி வீதத்தை பிரயோகிப்பதில் ஈட்டுகைகளிலிருந்தான மற்றும் இலாபங்களிலிருந்தான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்தை தனிவேறாக இனங்காண்பதற்கு அல்லது விலக்களிக்கப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களை இனங்காண்பதற்கு நிதிக்கூற்றுக்களை தயாரித்து பேணுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவானது அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "வேறு சில ஆளினால் வெகுமதியளிக்கப்படுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்தவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "வேறு சில ஆளினால் கொடுப்பனவு ஒன்றைச் செய்வதற்காக தயாரிக்கப்பட்டு, நிரப்பப்பட்டு அல்லது தயாரிப்பதற்கு அல்லது நிரப்புவதற்கு உதவப்பட்டிருக்குமிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "விபரத்திரட்டுக்கள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாளின் சொந்த வரிப்பொறுப்பு தவிர்ந்த கருமங்கள் தொடர்புபட்ட தகவலின் விபரத் திரட்டு ஒன்றை கோப்பிடுவதற்கு இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவருக்கு ஏற்புடையதாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விபரத்திரட்டுகள், மதிப்பீடுகள், ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாளின் சொந்த வரிப்பெறுப்பு தவிர்ந்த கருமங்கள் தொடர்புபட்ட தகவலின் அல்லது வருடாந்த கூற்றின் விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுவதற்கு இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவருக்கு ஏற்புடையதாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பினை இடுவதன் மூலமும்:-

"தகவல் விபரத்திரட்டுகள் மற்றும்
வருடாந்த கூற்றுக்கள்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும்:-

"(3) மீளாய்வுக்கான வேண்டுகோள், கொடுத்துதவப்படவேண்டிய விபரத் திரட்டொன்று அல்லது வருடாந்த கூற்றொன்று இல்லாதிருக்கையில் செய்யப்பட்டுள்ள வரிமதிப்பீட்டிற்கு எதிரான ஆட்சேபனை ஒன்றாக இருக்குமிடத்து, அத்தகைய வேண்டுகோள் விடயத்திற்கேற்ப முறையாக நிரப்பட்ட விபரத்திரட்டு அல்லது வருடாந்தக் கூற்றொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும்:-

"(5) (அ) உட்பிரிவு (4) இன்கீழ் மீளாய்வுக்காக வரிசெலுத்துநரது வேண்டுகோளை பெற்று அறிவித்ததன் மேல், ஆணையாளர் தலைமையதிபதி வரிமதிப்பீட்டை அல்லது வேறு முடிபை மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஆ) மீளாய்வுக்கான வரிசெலுத்துநரது வேண்டுகோளானது, வரிமதிப்பீட்டை அல்லது வேறு முடிபை செய்துள்ள வரி அலுவலர் தவிர்ந்த வேறு வரி அலுவலர் ஒருவரினால் கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.";

(3) அப்பிரிவில் (6) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்திற்கிணங்க" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்திற்கிணங்க ஆனால், 135 ஆம் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைகள் எது எவ்வாறிருப்பினும்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "139 ஆம் பிரிவின்கீழ் நிருவாக மீளாய்வின் முடிபொன்றினால் இன்னலுற்ற ஆளொருவர் வரிமேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்கான முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "139 ஆம் பிரிவின் கீழ் வரிமதிப்பீடு பற்றிய நிருவாக மீளாய்வின் முடிபொன்றினால் இன்னலுற்ற ஆளொருவர் வரிமேன்முறையீடுகள் ஆணைக்குழுவுக்கு மீளாய்வு பற்றிய அம்முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "தொண்ணூறு நாட்கள் கழிந்திருந்தாலன்றியும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏழு மாதங்கள் கழிந்திருந்தாலன்றியும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியினை இடுவதன்மூலமும்:-

"(5) இப்பிரிவின் கீழ் மேன்முறையீட்டு மனுவொன்று, ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அல்லது 139 ஆம் பிரிவின்கீழ் நிருவாக மீளாய்வுக்கான வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து எத்தேதியன்று ஏழு மாதங்கள் காலப்பகுதி கழிந்துள்ளதோ அந்தத் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பிரதி ஒன்றுடன் சேர்த்து வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்கு எழுத்தில் கோப்பிடப்படுதல் வேண்டும்.";

(4) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும்:-

"(6) ஐந்தாம் உட்பிரிவிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், மேன்முறையீட்டாளர் இலங்கையில் இல்லாமை காரணமான, சுகவீனம் காரணமாக அல்லது வேறு நியாயமான காரணம் காரணமாக (2) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப் படுத்தப்பட்டவாறு மேன்முறையீட்டு மனுவொன்றைக் கோப்பிடுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளனர் எனவும் மேன்முறை யீட்டாளர் பக்கத்தில் நியாயமற்ற காலதாமதம் எதுவும் இருந்திருக்கவில்லை எனவும் வரிமேன் முறையீடுகள் ஆணைக்குழுவைத் திருப்தி செய்வதன்மேல் வரிமதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவைத் திருத்துதல்

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் "தேதிவரை (151 ஆம் பிரிவின்கீழ் காலநீடிப்பு)" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "தேதிவரை (151 ஆம் பிரிவின்கீழ் காலநீடிப்பு)" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பினை இடுவதன் மூலமும்:-

"குறைந்த செலுத்துகைகள் மீதான வட்டியும் பிந்திய செலுத்துகைகளும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும்:-

"(1) ஆணையாளர் தலைமையதிபதி, வரிசெலுத்துநர் ஒருவரால் இச்சட்டத்தின்கீழ் வட்டி மீளளிக்கப்படற்பாலதான தொகை ஒன்றை மீளளிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, வட்டியானது, கோப்பிடப்பட்ட மீளளிப்பு கோரிக்கை தேதியிலிருந்து எந்தத் தேதியன்று மீளளிக்கப்படற்பாலதான தொகை செலுத்தப் பட்டிருக்கிறதோ அந்த தேதிவரை வரிசெலுத்து நருக்கு அத்தகைய மீளளிக்கப்படற்பாலதான தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "கோப்பிடுகை அறுபது நாட்களினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கோப்பிடுகை ஆறு மாதங்களினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில், "மாதாந்தம் கூட்டுவட்டியுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே"மாதாந்தம் கணிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 190அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்*

**47.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 190 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது அச்சட்டத்தின் 190 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"கணக்காய்வாளர்கள், வரித் தொழிலர்கள், வரி மதியுரையாளர்கள் அல்லது*

190அ (அ) ஆணையாளர் தலமையதிபதிக்கு கொடுத்துதவுவதற்கென வரிவிபரத்திரட்டுக்களை, கணக்குகளை, பதிவேடுகளை, மேன்முறையீடுகளை மற்றும் ஆட்சேபனைகளை அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தை அல்லது தகவலை தயாரிக்கின்ற, நிரப்புகின்ற அல்லது சான்றுப்படுத்துகின்ற அல்லது

அங்கீகரிக்கப்பட்ட கணக்காய் வாளர்கள் தொடர்பில் தண்டனை விதிக்கும் ஏற்பாடுகள்

தயாரிப்பதில், நிரப்புவதில் அல்லது சான்றுப் படுத்துவதில் உதவுகின்றவரும்; அத்துடன்

(ஆ) உயர்தொழில் கடமையை நிறைவேற்றுவதை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றவரும் அல்லது அதன் நியாயமான கவனத்தை எடுப்பதற்கு தவறுகின்றவரும் அல்லது அத்தகைய ஆவணத்தை அல்லது தகவலை மோசடியாக தயாரிக்கின்றவரும் மற்றும் சான்றுப்படுத்துகின்றவரும் அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை, விதியை அல்லது கட்டளையை வேண்டுமென்றே தவறாக பொருள்கோடல் செய்கின்றவருமான

வரி செலுத்துநரின் முழுநேர ஊழியர் தவிர்ந்த எவரேனும் கணக்காய்வாளர், வரித்தொழிலர், வரிமதியுரையாளர், அல்லது அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய அறிவுத்திறனில் தொழில் புரிகின்ற அவரை தடுக்கின்ற தடுப்புக் கட்டளை ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**48.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின், "(1) இச்சட்டத்தில்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இச்சட்டத்தில்," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் "கமத்தொழில் வியாபாரம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும்:-

""கமத்தொழில் வியாபாரம்" என்பது விவசாயப் பண்ணை அல்லது விவசாயப் பதப்படுத்தல் வியாபாரம் எனப்பொருள்படும், ஆனால் விடயத்திற்கேற்ப மதுபான உற்பத்தி அல்லது பதப்படுத்தல் அல்லது புகையிலை விளைபொருள்கள் அல்லது தயாரிப்புகளை தவிர்க்கின்றது;

""விவசாயப் பண்ணை" என்பது-

(அ) மண்ணை உழுதல் மற்றும் எவையேனும் விபரணத்திலான தாவரங்களை அதில் பயிர்செய்தல், பச்சைவீட்டுப் பயிற்செய்கை, தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு, இறால் பண்ணை அல்லது விலங்கு வளர்ப்பு, கோழிப் பண்ணை, அடைகாப்பகம், கால்நடை அல்லது செயற்கை கருவூட்டல் சேவைகள்;

(ஆ) சந்தைக்கான ஏதேனும் விளைபொருளை தயாரிப்பதிலான அத்தகைய ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளினால் பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாட்டிலிருந்து விளைவிக்கப்பட்ட ஏதேனும் விளைபொருளை சுத்தப்படுத்தல், அளவிடுதல், பிரித்தல், தரப்படுத்தல், வெட்டுதல் அல்லது குளிர்வித்தல் ஆனால் விவசாய அல்லது உணவு பதப்படுத்தலை தவிர்க்கின்றது;

எனப் பொருள்படும்.

"விவசாயப் பதப்படுத்தல்" என்பது ஏதேனும் உள்ளூரில் விளைவிக்கப்பட்ட கமத்தொழில், மீன்பிடி அல்லது விலங்கு உற்பத்திப் பொருளைப் பதப்படுத்தல் எனப் பொருள்படும் என்பதுடன் சந்தைக்கான தயாரிப்பில் அத்தகைய உற்பத்திப் பொருளின் வடிவம், உருவமை அல்லது பௌதிகத் தோற்றம் ஆகியவற்றை மாற்றும் நோக்கத்திற்கென நீரிழப்பித்தலுக்கான, அரைப் பதற்கான பொதியிடுவதற்கான, தகரத்தில் அடைப்பதற்கான பொறுப்பு முயற்சியை உள்ளடக்கு கின்றது. ஆனால் ஆழ்கடல் மீன்பிடித்தலை அல்லது தயாரிப்பை உள்ளடக்காகது;

(3) பந்தி (அ) வில் அப்பிரிவின், "பங்கிலாபம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "பங்கை திரும்ப வாங்குவதில்", என்னும் சொற்களுக்குப் பதிலாக பங்கை திரும்ப வாங்குவதில்" என்னும் சொற்கை இடுவதன் மூலமும்;

(4) "களியாட்டம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தில், "எவரேனும் ஆளுக்கு உணவு, பானங்கள், புகையிலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆளுக்கு மதுபானம், புகையிலை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(5) "முகாமையாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும்:-

""உற்பத்தி" என்பது –

(அ) வேறுபட்ட பெயர், பண்புப்பெயர் அல்லது பயன்பாட்டைக் கொண்டுள்ள புதிய மற்றும் தனிவேறான கருப்பொருளை, பொருளை, அல்லது வஸ்தினுள்ள அத்தகைய கருப் பொருளை, பொருளை, வஸ்தில் உருமாற்றத்தை விளைவிக்கின்ற; அல்லது

(ஆ) வேறுபட்ட இரசாயனக் கலவை அல்லது உள்ளகக் கட்டமைப்பு ஒன்றுடன் புதிய மற்றும் தனிவேறான கருப்பொருளை, பொருளை அல்லது வஸ்தை தோற்றுவிக்கின்ற;''

உயிரற்ற பௌதீக கருப்பொருள், பொருள் அல்லது வஸ்து ஒன்றிலான மாற்றம் ஒன்று எனப் பொருள்படும்.

(6) பந்தி (ஆ) வில் அப்பிரிவின், "சிறிய நடுத்தர பொறுப்பு முயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தின் "உருவகம்" என்னும் சொற்களுக்குப்பதிலாக, ''அத்தகைய ஆளினதும் இணையாளர்களினதும் கூட்டுமொத்த ஆண்டு மொத்த விற்பனை குறைவு ரூபா 500,000,000 ஐ விட குறைவாக இருந்தாலன்றி உருவகம்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(7) அப்பிரிவின் "குறித்தரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் -

(ஆ) அவ்வரைவிலக்கணத்தின் (ஓ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஔ) (i) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மூலோபாய கருத்திட்டங்கள் சட்டத்தின்கீழ் வரிவிதிமுறைகள் அனுபவிக்கின்றதும் அத்துடன் கருத்திட்ட அமுல்படுத்தல் காலப்பகுதியின்போது அத்தகைய

உடன்படிக்கை ஏற்பாடுகளின் கீழ் தீர்வையற்ற அடிப்படைமீது பொருட்கள் அல்லது மூலப்பொருட்கள் தொடர்புபட்ட இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றதுமான கம்பெனி ஒன்று உட்பட 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ள ஏதேனும் கம்பெனிக்கு; அல்லது

(ii) ஏதேனும் அரசாங்க அதிகாரசபையின்கீழ் தீர்வையற்ற அடிப்படையில் குறித்த பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தகுதியான எவரேனும் ஆளிற்கு,

ஆனால் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற மூன்றாண்டு காலப்பகுதியினுள் இறக்குமதி மாற்றீடொன்றாக இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொகைவரை 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ள ஏற்றுமதி சார்ந்த கம்பெனி ஒன்றினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை.

(க) குறித்துரைக்கப்பட்ட துறைமுக வளாகத்தினுள் உள்ளூர் எரிபொருள் வழங்குநர்களுக்கு கடல்சார் எரிபொருளினை வழங்குதல் உள்ளடங்கலான கடல்சார் எரிபொருளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட எரிபொருள் வழங்கும் சேவைகள்;";

(8) "இலங்கை நிரந்தர தாபனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:

"இலங்கை நிரந்தர தாபனம்" என்பது அத்தகைய வியாபாரம் இலங்கையில் நிறைவேற்றப்படுகின்ற நாட்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் எந்த வியாபார இணைந்த அல்லது நிலையான வியாபார இடத்தின் ஊடாக தொழில்பொறுப்பு முயற்சி வியாபாரம் முழு அளவில் அல்லது பகுதியளவில் நிறைவேற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் வியாபார இணைப்பு அல்லது நிலையான வியாபார இடம் எனப் பொருள்படும்;";

(9) "வரிவிபரத்திரட்டு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "தகவல் விபரத்திரட்டொன்று எனப் பொருள்படும்" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "தகவல் விபரத்திரட்டு அல்லது வருடாந்தக் கூற்று எனப் பொருள்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(10) அப்பிரிவின் "வரிசெலுத்துநர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு" எனப் பொருள்படும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 201 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**49**. முதன்மைச்சட்டவாக்கத்தின் 201 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஐந்து ஆண்டுகளில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏழு ஆண்டுகளில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**50.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின், "2017, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2018, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**51.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "வரிமதிப்பிட்டாண்டொன்றிற்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான ஆனால் 2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான காலப் பகுதிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய 2020, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் வதிவிட அல்லது வதிவற்ற தனியாள் ஒருவரின் வரிவிதிக்கப் படற்பாலதான வருமானம் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

| *வரிமதிப்பீட்டாண்டு ஒன்றிற்கான வரி விதிக்கப்படற்பாலதான வருமானம்* | *செலுத்தப்படற் பாலதான வரி* |
|---|---|
| *3 மில்லியன் ரூபாவை விஞ்சாத* | *ரூபா 0 ஐ விஞ்சும் தொகைக்கு 6%* |
| *3 மில்லியன் ரூபாவை விஞ்சிய ஆனால் 6 மில்லியன் ரூபாவை விஞ்சாத* | *180,000 ரூபாவும் 3 மில்லியன் ரூபாவை விஞ்சுதலான தொகையின் 12 % உம்* |
| *6 மில்லியன் ரூபாவை விஞ்சிய* | *540,000 ரூபாவும் 6 மில்லியன் ரூபாவை விஞ்சுதலான தொகையின் 18% உம்* |

(இ) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியில் -

(i) அவ்வுட்பந்தியின் (ஆ) (1) என்னும் விடயத்தில், ''குறைவாகவிருக்கின்ற விடத்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர், குறைவாகவிருக்கின்றவிடத்து" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பந்தியின் (ஆ) (ii) என்னும் விடயத்தில், "மேலாக இருக்கின்றவிடத்து"

என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர், மேலாக இருக்கின்றவிடத்து” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(iii) அவ்வுட்பந்தியின் (ஆ) (ii) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(iii) 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்;

| வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு (3) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்தான மொத்த வருமானம் | செலுத்தப்படற்பாலதான வரி |
|---|---|
| 10,000,000 ரூபாவை விஞ்சாத | 0 ரூபா ஐ விஞ்சுதலான தொகையின் 0% |
| 10,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 20,000,000 ரூபாவை விஞ்சாத | 10,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 6% |
| 20,000,000 ரூபாவை விஞ்சிய | 600,000 ரூபாவும் 20,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 12 %உம் |

(ஈ) அப்பந்தியின் (3) ஆம் உட்பந்தியின் -

(i) "உட்பந்தி (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "உட்பந்தி (2) இன் (ஆ) என்னும் விடயத்தின் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் விடயத்தில், "பெறப்பட்ட தொகை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பெறப்பட்டதொகை; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(iii) அவ்வுட்பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் விடயங்களை நீக்குவதன் மூலமும்; அத்துடன்

(iv) அவ்வுட்பந்தியின் (ஊ) என்னும் விடயத்தினை அதன் (ஈ) என்னும் விடயமாக மீள எழுத்திடுவதன் மூலமும்;

(உ) அப்பந்தியின் (4) ஆம் உட்பந்தியில், "மதுபானம் அத்துடன் அல்லது புகையிலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் மதுசாரம் அல்லது புகையிலை உற்பத்திப்பொருளின் உற்பத்தியை மற்றும் விற்பனையை அல்லது இறக்குமதியை மற்றும் விற்பனையை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஊ) அப்பந்தியின் (4) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"(5) உட்பந்தி (1அ) வின் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், தனியாளினது ஈட்டுகைகள் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் தொடர்பில் பெறப்பட்ட பிரதிபலனிலிருந்தான இலாபங்கள் என்பன ஆகக்கூடியது 14% சதவீதத்தில் வரிவிதிக்கப் படுதல் வேண்டும்.";

(2) அவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"2 பங்குடைமைகளுக்கான வரிவீதம்.

(1) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய பங்குடைமையின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 2020, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்வகையில் பின்வரும் வீதங்களின் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

| வரிமதிப்பீட்டாண்டு ஒன்றுக்கான வரிவிதிக்கப் படற்பாலதான வருமானம் | செலுத்தப் படற்பாலதான வரி |
|---|---|
| 10,000,000 ரூபாவை விஞ்சாத | ரூபா 0 ஐ விஞ்சுதலான தொகையின் 0% |
| 10,000,000 ரூபாவை விஞ்சியது | 10,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 6% |

(2) பங்குடைமையொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் முதலீட்டுச் சொத்துக்களின் தேறிய பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளக்குகின்ற விடத்து, அச்சந்தர்ப்பத்தின் -

(அ) அவ்வீட்டுகைகள், 10 சதவீதத்தின் பங்குடைமைக்கு வரிவிதிக்கப்படுவதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பங்குடைமையின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் எஞ்சியுள்ள தொகை மட்டும் உட்பந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தின் வரிவிதிக்கப்படுதல் வேண்டும் அத்துடன்;

(3) அவ்வட்டவணையின் 3 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், "24 சதவிதத்தின் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் 24% சதவீதத்திலும், 2020, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையில் 18% சதவீத்திலும் வரிவிதிக்கப் படுதல் வேண்டும்" என்னும் சொற்களையும் எண்களை யும் இடுவதன் மூலமும்;

(4) அவ்வட்டவணையின் 4 ஆம் பந்தியானது –

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(1) உட்பந்திகள் (2), (2அ) மற்றும் (3) இற்கு அமைய, வரிமதிப்பீட்டாண்டொன் றிற்கான கம்பெனி ஒன்றின் வரிவிதிக்கப் படற்பாலதான வருமானம் -

(அ) 2020, சனவரி 1 இற்கு முன்னர் 28 வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) 2020, சனவரி 1 இலிருந்து பயனுறும் வகையில் 24 வீதத்தில் வரிவிதிக்கப் படுதல் வேண்டும்.";

(ஆ) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியில், "வரிமதிப் பீட்டாண்டொன்றிற்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 1 இற்கு முன்னரான வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அ) வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான கம்பெனி ஒன்றின் ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களின் அத்தகைய பாகம் 2020, சனவரி 1 இலிருந்து பயனுறும் வகையில் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பந்தயம் மற்றும் சூதாட்ட வியாபாரம் ஒன்றிலிருந்தான அல்லது மதுபான விற்பனையிலிருந்தான அத்தகைய ஈட்டுகைகள் புறநீங்கலாக (மதுபானம் என்னும் விடயம் வேறொரு வியாபாரத்தின் வெறுமனே இடைநேர்விளைவானதாகவுள்ள வியாபாரம் ஒன்றிலிருந்தன அத்தகைய ஈட்டுகைகள் மற்றும்

இலாபங்கள் தவிர வேறு) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி வியாபாரத்திருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் - 14%;

(ஆ) பண்டங்களின் ஏற்றுமதி உட்பட பண்டங்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் விற்பனைக்கான அல்லது ஏற்றுமதிக்கான கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு வங்கியொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து அத்தகைய பண்டங்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் வியாபாரத்தை நடாத்துவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(இ) குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி ஒன்றின் ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(ஈ) கல்விசார் சேவைகளை வழங்குவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(உ) சுற்றுலாப்பயணத்துறை மேம்பாட்டுக்கான பொறுப்பு முயற்சி ஒன்றின் ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(ஊ) நிருமாண சேவைகளை வழங்குவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(எ) விவசாயப் பதப்படுத்தலிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(ஏ) சுகாதார கவனிப்பு சேவைகளை வழங்குவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(ஐ) வதிவுள்ள கம்பெனி ஒன்றிலிருந்தான பெறப்பட்ட பங்கிலாபங்களிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(ஒ) சுகாதார அமைச்சுக்கு, சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு, இலங்கைத் தரைப்படைக்கு, இலங்கை கடற்படைக்கு, இலங்கை வான் படைக்கு, இலங்கைப் பொலிசுப் படைக்கு மற்றும் கொவிட் நிலையத்தில் வழங்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு சாதனம் மற்றும் அதேபோன்ற உற்பத்திப்பொருட்கள் தொடர்பில் பெறப்பட்ட பிரதிபலனிலிருந்தான 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச்சபையினால் கம்பெனியொன்றினால் பெறப்பட்ட ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(ஓ) 2022, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் மூன்று வரிமதிப் பீட்டாண்டுகளுக்கு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் பெற்ற கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் 2021, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2021, திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் ஏதேனும் கம்பனியின்

பங்குகளை நிரற்படுத்துகின்ற அக்கம்பெனியின் ஈட்டுகைகளும் இலாபங்களும் இருந்தும்கூட உயர் வருமானவரியானது இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஏற்புடையற்பால தானதாகும் - 14% ;

(ஔ) இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம் தொடர்பில் பெறப்பட்ட பிரதிபயனிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%;

(க) இவ்வுட்பந்திகளின் (அ), (ஆ), (இ), (ஒ) அல்லது (ஓ) என்னும் விடயத்திற்கமைய, தயாரிப்பிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 18%;

(ங) பந்தயம் மற்றும் சூதாட்டத்தை நடாத்துவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 40%;

(ச) தயாரிப்பு, மற்றும் விற்பனை அல்லது இறக்குமதியிலிருந்தான மற்றும் ஏதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்திப்பொருட்களின் விற்பனையிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 40%;";

(ஈ) அப்பந்தியின் (4) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"(5) இவ்வட்டணையின் 4 ஆம் பந்தியின் (1), (2அ), (3) மற்றும் (4) ஆம் உட்பந்திகளிற்கு இணங்க கணிப்பிடப்பட்ட கம்பெனி

யொன்றினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி பின்வருமாறு குறைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம்பெற்ற கொழும்பு பங்குபரிவர்த்தனையில் 2021, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2021, திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் ஏதேனும் கம்பெனியின் பங்குகளை நிரற்படுத்துகின்ற அக்கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான மொத்த வருமானவரி (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையிலான ஏதேனும் உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட அடிப்படையிலும் வரிவிதத்திலும் கணிக்கப்பட்ட செலுத்தப்படற்பாலதான வருமான வரி உட்பட ஆனால் முதலீட்டுச் சொத்துகளின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகள்தவிர) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் பல்தேசியக் கம்பெனியினாலான பங்கிலாபத்திலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களின் மீது செலுத்தப்படற்பால

தான வருமானவரியின் அத்தகைய பாகம் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக் கமைய 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதி யிலிருந்து தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டுக்கு இருபத்தைந்து சத வீதமும் அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் இரண்டு வரி மதிப்பீட்டாண்டு ஐம்பது சதவீதமும் குறைக்கப்படுதல் வேண்டும் -

(i) (இதனகத்துப் பின்னர் "முதலாவது ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரிமதிப்பீட்டாண்டுக்கு உடன்முற்போந்த ஆண்டு டன் ஒப்பிடுகையில் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியி லிருந்து தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டில் முப்பது சதவீதத்தினால் (குறித் துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகள்) ஏற்றுமதிகளி லான அதிகரிப்பு; அல்லது

(ii) முதலாவது ஆண்டுடன் ஒப்படுகையிலும் அடுத் துப்பின்னரான வரிமதிப் பீட்டாண்டில் அத்தகைய நிலையை பேணுகையிலும் 2022, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டில் ஐம்பது சதவீத்தினால் (குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகள் தவிர) ஏற்மதிகளிலான அதிகரிப்பு;

(5) அவ்வட்டவனையின் 5 ஆம் பந்தியில்-

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், "(28%) சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 1 இற்குமுன்னர் 28% சதவீதத்திலும் 2020, சனவரி 1 இலிருந்து பயனுறும் வகையில் 24% சத விதத்திலும் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியில், "முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருதான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) அவ்வட்டவணையின் 7 ஆம் பந்தியில்-

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில்,"(28%) சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1 இற்குமுன்னர் 28% சதவீதத்திலும் 2020, சனவரி 1 இலிருந்து பயனுறும் வகையில் 24% சதவிதத்திலும் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (3) ஆம் உட்பந்தியில், "முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருதான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முதலீட்டுச் சொத்துக்களின் தேனிப்பெறுகையிலிருந்தான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(7) அவ்வட்டவணையின் 8 ஆம் பந்தியின் தலையங்கத்தில், "சகாய அல்லது ஓய்வூதிய நிதியங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சகாய ஓய்வூதிய அல்லது பணிக்கொடை நிதியங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(8) அவ்வட்டவணையின் 10 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் -

(அ) அவ்வுட்பந்தியின் (இ) (ii) என்னும் விடயத்தில், "14; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "14%; என்னும் இலக்கங்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பந்தியின் விடயம் (இ) (iii) இல், "14%." என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக, "14%; அத்துடன்" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பந்தியின் விடயம் (இ) (iii) என்பதனை உடனடுத்துப் பின்வரும் விடயத்தினைச் சேர்ப்பதன் மூலமும்:-

(iv) பிரிவு 85 (1அ) எனும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் என்னும் விடயத்தில் -

(ivஅ) வட்டி அல்லது கழிவு செலுத்தப்பட்டது - 5%

(ivஆ) வேறு எல்லாக்கொடுப்பனவுகளும் - 14%

(9) அவ்வட்டவணையின் 10 ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"11. விவசாயப்பதப்படுத்தலுடன் அல்லது தயாரித்தலுடன் சேர்த்து விவசாயப் பண்ணையில் ஈடுபடுகின்ற ஆட்களுக்கான வரிவீதம்.

விவசாயப்பதப்படுத்தல் அல்லது தயாரித்தல் வியாபாரத்திலிருந்தான வருமானம் தொடர்பில் எவரேனும் ஆளினால் கணிப்பிடப்பட்ட செலுத்தப்படற்பாலதான மொத்த வருமானவரியானது 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதி தொடங்குகின்ற ஐந்து வரிமதிப்பீட்டாண்டினுள் இலங்கையில் அவரது விவசாயப்பதப்படுத்தல் அல்லது தயாரிப்பு வியாபார செயற்பாட்டிற்காக அவரினால் உற்பத்திசெய்யப்பட்ட விவசாய பண்ணை உற்பத்திகளின் பயன்பாட்டிலிருந்து உழைக்கப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களை அதிகரிப்பதற்கு இருபத்தைந்து சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

"12 பல்வேறுபட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களுக்கான வரிவீதங்களின் ஏற்புடைமை ஆளொரு வருடைய வரிசெலுத்தப்படற்பாலதான வருமானம் பல்வேறுபட்ட வியாபார நடவடிக்கைகளிலிருந்தான பல்வேறுபட்ட மூலங்களை அல்லது ஈட்டுகைகளை அல்லது இலாபங்களை கொண்டுள்ளவிடத்து, அத்தகைய ஒவ்வொரு வருமான மூலத்திற்கு அல்லது அத்தகைய பல்வேறுபட்ட வியாபார நடவடிக்கைகளிலிருந்தான அத்தகைய ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களுக்கு ஏற்புடைமையாகும் வருமான வீதங்களானவை அத்தகைய ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களுக்கு ஏற்புடைமையாக்கப்படுதல் வேண்டும்.";

**52.** முதன்மைச்சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்*

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (2), (3) மற்றும் (4) ஆம் உட்பந்திகளில், "அவ்வாண்டின்போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே, "அவ்வாளினால் செய்யப்பட்ட மொத்த முதலீடு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (6) ஆம் உட்பந்தியில், "பிற்போடப் படுதலும் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிற்போடப்படுதலும் ஆனது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (9) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியினை இடுவதன்மூலமும்:-

**"குத்தகைப்பற்று நிலங்களின் சீர்திருத்தங்கள்;**

(9) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், முதலீட்டினை செய்துள்ள ஆளினால் குத்தகைப் பற்று நிலமொன்றில் நிருமாணிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட நிரந்தர தன்மை ஏதேனும் கட்டிடத்தை, கட்டமைப்பை அல்லது அதையொத்த வேலையை இவ்வட்டவணையின் நோக்கத்துக்காக அருவச்சொத்தொன்றாக கருதப்படுதலாகாது ஆனால் தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்தொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

**"பிடித்துவைத்தல் வரியிலிருந்து குறித்த சில பங்கிலாபங்களை விலக்களித்தல்;**

2. முதலாம் அட்டவணையில் எது எவ்வாறிருப்பினும், இவ்வட்டவணையின்கீழ் அதிகாிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புக்களால் பாதுகாக்கப்பட்ட இலாபங்களிலிருந்து அக்கொடுப்பனவு செய்யப்பட்டதோ அக்காலப் பகுதிக்கு பங்கிலாபம் செலுத்தும் கம்பெனி இலங்கையிலுள்ள (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்துக்களின்மேல் 250 மில்லியன்

அ. டொ இற்கு மேல் உற்றிருந்தால் 2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வதிவற்ற உறுப்பினர் ஒருவருக்கு கம்பெனியொன்றினால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஒன்றின்மீது பிரயோகிக்கப்படவேண்டிய வரிவிதமானது பூச்சியமாக இருத்தல் வேண்டும்.

(3) அவ்வட்டவணையின் 3 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

**"ஊழிய வருமானத்தை விலக்களித்தல்**

3. முதலாம் அட்டவணை எது எவ்வாறிருப்பினும், இவ்வட்டவணையின் கீழ் அதிகரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புக்களினால் பாதுகாக்கப்பட்ட இலாபங்களிலிருந்து அக்கொடுப்பனவு எக்காலப்பகுதிக்கு செய்யப்பட்டதோ அக்காலப்பகுதிக்கு அல்லது அக்காலப் பகுதியின் போது ஏதேனும் நேரத்தில் வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கை இருபதை விஞ்சாதவிடத்து வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்குவதிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு இதில் எது உயர்வானதோ அதனை இலங்கையில் உள்ள (அருவச்சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்துக்களின்மேல் 250 மில்லியன் அ. டொ. இற்கு மேல் உற்றிருந்தால் வெளிநாட்டு ஊழியர்களின் ஊழிய வருமானம்மீது பிரயோகிக்கப்படவேண்டிய வரிவீதம் பூச்சியமாக விருத்தல் வேண்டும்.".

**53.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்*

(1) அவ்வட்டவணையின் பந்தி (ஈ) வின் உட்பந்தி (ii) இல், "ஆணையாளர் தலைமையதிபதியினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட சகாய நிதியினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் பந்தி (ஏ) ஐ உடனடுத்துப்பின்னர் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஏஏ) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் பெற்ற கொழும்பு பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்பட்ட மெய்சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பொன்று விற்பனை செய்யப்பட்ட பரிமாற்றப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட காணி அல்லது கட்டிடத்தின் தேறிப்பெறுகையிலிருந்து 2021, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆளொரு வரினால் செய்யப்பட்ட ஈட்டுகை ஒன்று;

(3) அவ்வட்டவணையின் பந்தி (ஐ) இனை நீக்கிவிட்டு அதற்குப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஐ) பின்வருவோருக்கு அல்லது பின்வருவனவற்றுக்கு திரளுகின்ற அல்லது அவற்றினால் அல்லது அவர்களினால் பெறப்பட்ட வட்டி —

(i) தருமநிறுவனம் ஒன்றினால் பேணப்படும் வீடொன்றில் சிறுவர்கள், வயோதிபர்கள் அல்லது ஊனமுற்றவர்களுக்கு பராமரிப்பு வழங்கும் நோக்கத்திற்காக மட்டும் பிரயோகிக்கப்படுகின்றது என ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படுகின்ற விடத்து, அத்தகைய தரும நிறுவனம்;

(ii) இலங்கையிலுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது அத்தகைய ஆளினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடன்மீது இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆள்;

(iii) 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் ஏதேனும் வர்த்தக வங்கியினால் அல்லது ஏதேனும் விசேடித்த வங்கியில் எவரேனும் ஆளினால் அல்லது அவர் சார்பில் திறக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது வரவுக்கு வைக்கப்பட்ட பணத்தின்மீது எவரேனும் ஆள்;

(iv) ஒன்றில் 2020, ஏப்பிறல் 8 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தால் அல்லது இலங்கை ரூபாவில் (பின்னர் புதுப்பிக்கப்பட்ட கணக்குகள் நீங்கலாக) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டு பரிவர்த்தனை சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவினை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறு இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் திறக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட "விசேட வைப்புக் கணக்கு" ஆக பெயரிடப்பட்ட வைப்புக் கணக்கு காலப் பகுதி ஒன்றிலிருந்து எவரேனும் ஆள்;

(v) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் நலன்புரிச் சங்கம்;

இவ்வுட்பந்தியில், ‘நலன்புரிச் சங்கம்’ என்பது உறுப்பினர்களின் சேமிப்புக் களை மேம்படுத்துகின்ற தண்ணளி

நிதியம் உட்பட, ஆனால் இலங்கையில் அல்லது வேறு இடத்தில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கூட்டிணைக் கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பெனி மற்றும் பங்குடமையொன்று தவிர்ந்த, அதன் உறுப்பினர்களின் அல்லது அவர்களின் முறையான குடும்பங்களின் சேமநலனுக்காக நிறுவப்பட்டுள்ளதும் அல்லது அமைக்கப்பட்டுள்ளதும் அதன் உறுப்பினர்களினால் உதவுதொகைகள் செலுத்தப்படுகின்றதுமான நிதிய மொன்று அல்லது சங்கமொன்று எனப் பொருள்படும்;

(vi) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஏதேனும் வைப்புத்தொகையானது அவ்வரி மதிப்பீட்டாண்டிற்கான ஏதேனும் பல்தேசிய கம்பெனியின் இறக்குமதி செலவினத்தை மேவுவதற்கு பேணப்படின் ஏதேனும் உள்நாட்டு வங்கியில் திறக்கப்பட்டு வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படுகின்ற அத்தகைய வைப்புத்தொகை மீதான அப்பல்தேசிய கம்பெனி.

இவ்வுட்பந்தியில், பல்தேசிய கம்பெனி என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபார தாபனங்களுடன், இணைந்துள்ள கம்பெனிகள் குழுவொன்றின் பாகமாகவுள்ள கம்பெனியொன்று எனப் பொருள்படும்;";

(4) அவ்வட்டவணையின் (ஓ) மற்றும் (ஔ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(ஓ) (i) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திலிருந்து அல்லது 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியத்திலிருந்து எவரேனும் ஆளினால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(ii) திரட்டு நிதியத்திலிருந்து பராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து அல்லது அரசாங்கத்தினூடாக ஒழுங்கேற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(ஔ) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்டதும்-

(i) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்டதுமான ஏதேனும் தங்க முறியின் மீதான வட்டி, கழிவு அல்லது ஏதேனும் ஈட்டுகையின் தேறிப்பெறுகை என்ற வகையாக இலங்கையின் நிரந்தரத் தாபனமொன்றல்லாத எவரேனும் வதிவற்ற ஆளினால் ஈட்டப்பட்ட ஏதேனும் வருமானம்;

(ii) இலங்கை அபிவிருத்தி முறிகளுட்பட, வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட ஏதேனும் தங்க முறியின்மீது, விடயத்துக் கேற்ப, செலுத்தப்பட்ட அல்லது

அனுமதிக்கப்பட்ட வட்டி அல்லது கழிவு என்ற வகையாக எவரேனும் ஆளினால் ஈட்டப்பட்ட ஏதேனும் வருமானம்;';

(5) அவ்வட்டவணையின் (ஔ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஔஔ) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்டவையும் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் சர்வதேச தங்க முறிகளில் ஐ அ. டொ. 100 மில்லியனுக்கும் குறையாத கூட்டுமொத்த முதலீட்டைச் செய்த வர்த்தக வங்கி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் பெறப்பட்டதும் பெற்றுக்கொள்ளப்பட்டதுமான அல்லது அத்தகைய முறிகளின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகை;

"(ஔஔஔ) (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழான பிணையம் அல்லது திறைசேரி முறிகள் அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான திறைசேரி உண்டியல்களிலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்ட எவையேனும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான

வங்கிகளினால் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் திரளுகின்ற அல்லது பெறப்படுகின்ற வட்டி அல்லது கழிவு;";

(6) அவ்வட்டவணையின் (ச) என்னும் பந்தியில், "செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஒன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஒன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(7) அவ்வட்டவணையின் (ச) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(சச) 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் -

(i) அத்தகைய பங்கிலாபக் கொடுப்பனவு வதிவிடக் கம்பெனியொன்றினால் பெறப்பட்ட பங்கிலாபத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்ட அளவு வரை உறுப்பினரொருவருக்கு அவ்வதிவிடக் கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபமொன்று;

(இப்பந்தியில், "பங்கிலாபத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எவையேனும் செலவுகள் அல்லது நட்டங்கள் இருப்பின் அவற்றையும் அக்கம்பெனியினால் பெறப்பட்ட பங்கிலாபத்தின் மீது செலுத்தப்பட்ட அல்லது

செலுத்தப்படற்பாலதான வருமான வரியையும் கழிப்பனவு செய்ததன் பின்னர் அக்கம்பெனியினால் பெறப்பட்ட அத்தகைய பங்கிலாபம் எனப்பொருள்படும்);

(ii) வதிவற்ற ஆளொருவராகவுள்ள உறுப்பினரொருவருக்கு ஒரு வதிவுள்ள கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபமொன்று;

(iii) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடுகளுக்கிணங்கப் பின்வரும் வியாபாரங்களுள் ஏதேனும் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் ஈடுபடுகின்றதும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதுமான ஒரு வதிவுள்ள கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபமொன்று:-

(iiiஅ) இறக்குமதி, சிறிய பதனிடுகை மற்றும் மீள் ஏற்றுமதியை உட்படுத்துகின்ற துறைமுகக் களஞ்சியத்தொழில்;

(iiiஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறுகை செய்யப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றை இலங்கைக்குக் கொண்டு வராமல் வேறொரு நாட்டுக்குக் கப்பலேற்றப்பட முடியுமாகவுள்ள கரைகடந்த வியாபாரம்;

(iiiஇ) வெளிநாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு முகப்புமுனைச் சேவைகளை வழங்குதல்;

(iiiஈ) நிதிசார் வழங்கற் சங்கிலியையும் உண்டியலிடும் தொழிற்பாடுகளையும் முகாமை செய்வதற்காகத் தலைமை வாங்குநர்களின் தலைமையலுவலகத் தொழிற்பாடுகள்;

(iiiஉ) இலங்கையில் சுங்கப்பண்டகசாலை அல்லது பல்நாட்டுத் திரட்டுகை உட்பட ஏற்பாட்டியல் சார் சேவைகள்'';

(8) அவ்வட்டவணையின் (ண) என்னும் பந்தியில், ''ஒரு வதிவுள்ள கம்பெனியின் பங்குகளை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எவரேனுமாளினால் பெறப்படுமிடத்து வதிவற்ற கம்பெனியொன்றிலான பங்குகளின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(9) அவ்வட்டவணையின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(ணண) கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையினால் நிரற்படுத்தப்பட்டதும் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான நிலைச் சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து கூறு வைத்திருப்பவரொருவரினால் வியாபாரம் அல்லது முதலீடொன்றின் மூலதனச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளாக பெறப்பட்ட கூறுகளின் அல்லது பணத்தொகைகளின் தேறிப்பெறுகையின் மீதான பங்கிலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள்;'';

(10) அவ்வட்டவணையின் (த) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ந) ஸ்ரீலங்கன் எயார்லைன் லிமிடெட்டிலிருந்து வானூர்தி, மென்பொருள் உரிமங்கள் அல்லது வேறு தொடர்புபட்ட சேவைகளுக்கான ஏதேனும் கொடுப்பனவாக எவரேனும் வதிவற்ற ஆளொருவரினால் 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(ப) பின்வருவனவற்றிலிருந்து எவரேனுமாளினால் ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் -

(i) 2019, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று தொடங்கும் ஐந்து வரி மதிப்பீட்டாண்டு காலப்பகுதியினுள் அத்தகைய ஆளின் விவசாயப் பண்ணையிலிருந்தான விளைபொருளின் விற்பனை:

ஆயின், விவசாயப் பண்ணை விளை பொருட்களை உற்பத்திசெய்தல் மற்றும் அத்தகைய விளைபொருளை ஏதேனும் தயாரிப்பின் விவசாய பதப்படுத்தலுக்கு அல்லது உற்பத்திசெய்வதற்கு பயன் படுத்தலைக் கொண்டுள்ள பொறுப்பு முயற்சியொன்று தொடர்பில், அத்தகைய விளைபொருள் அத்தகைய கருதப்பட்ட விற்பனைக் காலத்தில் காணப்படுகின்ற சந்தைப் பெறுமதியில் விவசாயப் பதப்படுத்துநர் அல்லது உற்பத்தியாளருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன்

விவசாயப் பண்ணை தொடர்பில் அத்தகைய கருதப்பட்ட விற்பனையை அடிப்படையாகக்கொண்டு கணிப்பீடு செய்யப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள், 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் ஐந்து வரி மதிப்பீட்டாண்டு காலப்பகுதியுள்ளான விலக்களிக்கப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(ii) விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, 2020, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தகவல்தொழில்நுட்ப வியலையும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளையும் வழங்குதல்;

(iii) 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்கு எவரேனு மாளுக்கு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அளிக்கப்பட்ட சேவைகளுக்கான கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப் படுமிடத்து, அத்தகைய சேவைகள்;

(iv) 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் (உட்பந்தி (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஈட்டுகைகளும் இலாபங்களும் தவிர) அத்தகைய ஈட்டுகைகளும் இலாபங்களும் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்டு அல்லது பெறப்பட்டு வங்கி யொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப் படுமிடத்து ஏதேனும் வெளிநாட்டு மூலம்;

(V) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி எண்ணக்கருவின் கீழ் (தொதொகப எண்ணக்கரு) தரப்படுத்தப்பட்டதும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான ஏதேனும் தொழிற் கல்வி நிறுவனம்–

(அ) அவ்வரி மதிப்பீட்டாண்டிற்கு நேர்முற்போந்த வரி மதிப்பீட்டாண்டில் எவையேனும் தொழிற் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மாணவர் உள்ளீர்ப்புடன் ஒப்பிடுகையில் அத்தகைய வரி மதிப்பீட்டாண்டிற்கான அதன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மாணவர் உள்ளீர்ப்பை இரட்டிப்பாக்கியிருப்பின்;

(ஆ) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் ஐந்தாண்டு காலப்பகுதியொன்றிற்கு,

அத்தகைய நிறுவனத்தின் அத்தொழிற் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்:

ஆயின் எவ்வாறாயினும், (அ) என்னும் பந்தியின் நோக்கத்தக்காக, முதலாம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தொழிற்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மாணவர் உள்ளீர்ப்பை இரட்டிப்பாக்கியதும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு முதலாம் ஆண்டின் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்

களுக்கான அதே மாணவர் உள்ளீர்பைப் பேணுகின்றதுமான ஏதேனும் நிறுவனம், அத்தகைய ஆண்டுகளில் உள்ள தேவைப் பாட்டை பூரணப்படுத்திய நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(vi) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட அத்தகைய ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் வங்கியொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுகின்றவிடத்து, தங்கம், இரத்தினக்கற்கள் அல்லது ஆபரணங் களின் ஏதேனும் ஏற்றுமதி வியாபாரம் அல்லது இலங்கைக்கு கொண்டுவரப் படுகின்ற இரத்தினக்கற்களை வெட்டி மெருகூட்டுதல் அத்துடன் அத்தகைய வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதலின் பின்னர் ஏற்றுமதி செய்யப்படும் வியாபாரத்திலிருந்தானவை;

(ம) 2020, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் -

(i) ஆய்வுகூடச் சேவைகளிலிருந்து அல்லது நியமங்களின் சான்றுப்படுத்துகைச் சேவைகளிலிருந்து எவரேனும் வதிவற்ற ஆளினால் பெறப்பட்ட ஏதேனும் தொகை;

(ii) மானியக்கொடைகள் அல்லது நன்கொடை கள் என்றவகையாக, மத விவகாரங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுடன் பதிவுசெய்யப்படுகின்ற ஏதேனும் மத நிறுவனத்தினால் பெறப்பட்ட ஏதேனும் தொகை;

(ய) இதன்கண் அடங்கியுள்ள நிபந்தனைகளுக்கமைய, அக்காலப் பகுதிக்காக, 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கிய (ஏலவேயுள்ள பொறுப்புமுயற்சியொன்றை பிரிப்பதன் மூலம் அல்லது மீள்நிர்மாணிப்பதன் மூலம் அமைக்கப்படாத) பின்வரும் ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியிலிருந்து ஆளொருவரினால் (இச்சட்டத்தின் IV ஆம் அத்தியாயத்தின் கீழ் கணக்கிடப்பட்டவாறு வியாபாரத்தின் மூலதனச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான எவையேனும் ஈட்டுகைகள் தவிர) வியாபாரத்திலிருந்து பெறப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள்:-

(i) பத்தாண்டு காலப்பகுதியொன்றிற்காக, (ஆளொருவரினால் வழங்கப்பட்ட நிர்மாணச் சேவைகளின் வழங்குகையில் உள்ள அதே நிபந்தனைகளுடன் இடமொன்றிலிருந்து அவ்வாளினால் மீள்சுழற்சி செய்யப்பட்ட நிர்மாணப்பொருட்களைப் பயன்படுத்தி அத்தகைய சேவைகளை வழங்குவதில் சம்பந்தப்படுகின்ற அவ்வாள், அத்தகைய கருதப்பட்ட விற்பனைக் காலத்தில் காணப்படுகின்ற சந்தை விலையொன்றில் நிர்மாணச் சேவைக்கான அத்தகைய பொருட்களை விற்பனை செய்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.) நிர்மாணத்தொழிலில் ஏலவே பயன்படுத்தப்பட்ட பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்கு இலங்கையில் தாபிக்கப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட தனிவேறான இடமொன்றில் மீள்சுழற்சி செய்யப்பட்ட நிர்மாணப் பொருட்களின் விற்பனையில் சம்பந்தப்படுகின்ற பொறுப்பு முயற்சி யொன்று;

(ii) ஐந்தாண்டு காலப்பகுதிக்காக, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி எண்ணக்கருவின் கீழ் (தொதொகப எண்ணக்கரு)

தரப்படுத்தப்படுகின்றதும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றதுமான ஏதேனும் தொழிற் கல்வி நிறுவனத்தில் தொழிற்கல்வியை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் தனியாள் ஒருவரினால் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கிய ஏதேனும் வியாபாரம்;

(iii) ஏழாண்டு காலப்பகுதியொன்றிற்கு, இலங்கையில் படகுகள் அல்லது கப்பல்களை உற்பத்திசெய்து அத்தகைய படகுகள் அல்லது கப்பல்களின் வழங்குகையிலிருந்தான எவையேனும் ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களைப் பெறும் அல்லது பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக வதிவுள்ள ஆளொருவரினால் தொடங்கப்பட்ட பொறுப்பு முயற்சியொன்று;

(iv) ஏழாண்டு காலப்பகுதியொன்றிற்கு, நூறு மெகாவாற்றுக்குக்குறையாத சூரிய அல்லது காற்றுச் சக்தியை உற்பத்திசெய்வதற்கான இயலாற்றலுடன் தாபிக்கப்பட்டு அத்தகைய சக்தியை தேசிய நெய்யரிக்கு வழங்கும் ஏதேனும் புதுப்பிக்கப் படற்பாலதான மின்வலு கருத்திட்டம்;

(v) ஐந்தாண்டு காலப்பகுதியொன்றிற்கு, இலங்கையில் உள்ள உள்நாட்டு தொழிலாளர்களையும் உள்நாட்டு மூலப் பொருட்களையும் பயன்படுத்தி தொடர்பாடல் கோபுரங்கள் மற்றும் தொடர்புபட்ட துணைக் கருவிகளை நிர்மாணித்து நிறுவுகின்ற அல்லது அத்தகைய நிர்மாணம் அல்லது நிறுவுகைக்காக தேவைப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப சேவைகளை வழங்குகின்ற எவரேனும் வதிவிட ஆளினால் 2021, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கிய தொழில்முயற்சியொன்று;

(vi) அத்தகைய ஆள், பொறுப்பு முயற்சியொன்றில் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் முதலீடு செய்திருப்பின், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் உள்ள கரைகடந்த வியாபாரம் தொடர்பான தடைகட்டுப் பண்டகசாலை அல்லது பண்டகசாலைகளை வாடகைக்கு விடுவதற்கான பொறுப்பு முயற்சியொன்று;

((vi) ஆம் உட்பந்தியில் உள்ளவை தவிர) மேலேயுள்ள உட்பந்திகளில் ஏற்பாடுசெய்யப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதிகள், எந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்துகொண்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து (அத்தகைய வியாபாரத்தி லிருந்தான வரிமதிப்பிடப்படற்பாலதான வருமானம்) இலாபங்களை ஈட்டுவதற்கு பொறுப்புமுயற்சி தொடங்கு கின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிலிருந்து அல்லது எந்த வரி மதிப்பீட்டாண்டில் பொறுப்பு முயற்சியானது, எந்தத்தேதியில் அப்பொறுப்புமுயற்சி வர்த்தகத் தொழிற் பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு தொடங்குகின்றதோ அத்தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதியொன்றை நிறைவுசெய்கின்றதோ அந்த வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டு தொடங்குவதிலிருந்து, இவற்றில் எது முதலில் நிகழ்கின்றதோ அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்துக் கான நான்காம் அட்டவணை யைத் திருத்துதல்*

**54**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் உள்ள பட்டியலில், 5 ஆம் வகுப்பை உடனடுத்துப் பின்வரும் புதிய வகுப்பைச் சேர்ப்பதன் மூலமும்:-

| | |
|---|---|
| “6 | உள்நாட்டு திரவப்பால் தொடர்பான தயாரிப்புக் களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படு கின்ற புதிய தொழில்நுட்பத்துடனான கறவை இயந்திரங்கள்.”; |

(2) அவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (3) ஆம் உட்பந்தியில் உள்ள பட்டியலில், 5 ஆம் வகுப்பை உடனடுத்துப் பின்வரும் புதிய வகுப்பைச் சேர்ப்பதன் மூலமும்:-

| | |
|---|---|
| "6 | 2."; |

(ஆ) அப்பந்தியின் (4) ஆம் உட்பந்தியில் -

(i) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் விடயத்தில், "வாகனம்; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வாகனம்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பந்தியின் (ஈ) என்னும் விடயத்தில், ''இணைப்புப்பெட்டி.'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''இணைப்புப் பெட்டி; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(iii) அவ்வுட்பந்தியின் (ஈ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(உ) மோட்டார் சைக்கிள்.";

(3) அவ்வட்டவணையின் 4 ஆம் பந்தியின் (3) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(4) ஓராம் உட்பந்தியில் உள்ளவை முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது ஆறாம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கிணங்க கணக்கிடப்பட்ட அதிகரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புகளின் கழிப்பனவுக்கமைந்த ஆளொருவரின் தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்து

அவ்வாளினால் தேறிப்பெறப்படுகின்றவிடத்து, ஆண்டுக்கான ஆளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்ட வரிமதிப்பிடற்பாலதான விதிப்பனவொன்று, அத்தகைய சொத்துக்கு அவ்வரி மதிப்பீட்டாண்டின் போது அவ்வாளினால் பெறப்பட்ட பிரதிபயனுக்கு சமமானதாகவிருத்தல் வேண்டும் அல்லது சமச்சீராக்கும் அனுமதிப்பு எதுவும் அத்தகைய சொத்துக்கு அவ்வாண்டுக்கு அவ்வாளுக்கு அளிக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்துக் கான ஆறாம் அட்டவணை யைத் திருத்துதல்

**55.** முதன்மைச் சட்டவாக்கத்தக்கான ஐந்தாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில், "1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட்ட இலாபங்கள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திரட்டு நிதியத்துக்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்துக்கு செலுத்தப் பட்ட ஏதேனும் பணத்தொகை." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈ) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து, சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தினால் விதந்துரைக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவாறான சமுர்த்தி பயனுகரிக் குடும்பமொன்றிலிருந்தான பெண் தனியாள் ஒருவருக்கு கடை யொன்றை தாபிப்பதற்கு பணமாக

அல்லது வேறு வகையாக வதிவுள்ள தனியாள் ஒருவரினால் செய்யப்பட்ட உதவுதொகை;

(உ) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து, ஏதேனும் வேறு நிதி நிறுவனத்தின் கொள்ளலின் அல்லது ஒன்றிணைவின் ஆகுசெலவு விடயம் என்ற அடிப்படையில் எல்லா நிகழ்வுகளையும் கவனத்திற்கொள்வதன் மூலம் நிச்சயிக்கப்படுகின்றவிடத்தும் இலங்கை மத்திய வங்கியினால் உறுதிப்படுத்தப்படுகின்றவிடத்தும் அத்தகைய ஆகுசெலவு என்ற வகையாக ஏதேனும் நிதிநிறுவனத்தினால் உறப்பட்ட செலவினம். அத்தகைய கழிக்கத்தக்க செலவினம், மூன்று வரிமதிப்பீட்டாண்டு காலப்பகுதியொன்றிற்கு மேலாக சமமான தொகைகளில் பங்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் செலவினம் உறப்பட்ட வரிமதிப்பீட்டாண்டிலிருந்து தொடங்கும் அத்தகைய ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டில் அந்நிதிநிறுவனத்தின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து கழிக்கத்தக்கதாகவிருத்தலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், ஆண்டொன்றில் மொத்த வரிமதிப்பிடற்பாலதான வருமானம் மேலே அனுமதிக்கப்பட்ட கழிப்பனவை விஞ்சியிருக்கவில்லை என்ற காரணத்திற்காக, மூன்றாண்டு காலப் பகுதியின்போது கழிக்கப்படாத ஏதேனும் தொகை, மூன்றாண்டு காலப்பகுதியை உடனடுத்துப் பின்வரும் வரிமதிப்பீட்டாண்டிலும் அவ்வாறாகவும் கழிக்கப்படுதல் வேண்டும்;

(ஊ) (i) (திரைப்படமொன்றின் மேம்படுத்தல் செலவினம் உட்பட) ஐந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத ஆகுசெலவில் அத்தகைய திரைப் படத்தைத் தயாரிப்பதில்;

(ii) இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத ஆகுசெலவில் புதிய திரையரங்கொன்றை நிர்மாணித்தல் மற்றும் அதற்கு சாதனமிடுவதில்;

(iii) பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத ஆகுசெலவில் திரையரங்கொன்றை தரமுயர்த்துவதில்;

எவரேனும் ஆளினால் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட செலவினம்:

ஆயின், இப்பந்தியின் கீழான கழிப்பனவு, ஆண்டின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மூன்றில் ஒன்றிற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அதே மட்டுப்பாட்டுக்கு அமைய, தற்போதைய ஆண்டில் கழிப்பனவு செய்யப்படாத ஏதேனும் தொகை முன்கொண்டு செல்லப்பட்டு அடுத்துப்பின்வரும் ஆண்டிலும் மற்றும் அவ்வாறாகவும் கழிப்பனவு செய்யப்படலாம்.

இப்பந்தியின் நோக்கத்துக்காக —

“திரைப்படம்” என்பது எத்தகையதுமான ஏதேனும் வடிவம் அல்லது படிவத்தின் மீது தயாரிக்கப்பட்டதும் திரையரங்கொன்றில் திரையொன்றின் மீது ஒளி எறிவுமூலம்

ஆரம்பமாக வெளிக்காட்டப்பட உட்கருதப் பட்டதுமான அசையும் உருவத்தின் ஏதேனும் கட்புல செவிப்புல முன்வைப்பு எனப் பொருள்படும்; அத்துடன்

திரையரங்கொன்றை நிர்மாணித்தல் மற்றும் அதற்கு சாதனமிடுதல் அல்லது தரமுயர்த்துதல் மீதான செலவினம் எண்ணிமை தொழில்நுட்பவியல், எண்ணிமை திரையரங்கு முறைமைகள் மற்றும் டொல்பி ஒலி முறைமைகளினால் சாதனமிடப்பட்ட வாறு 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.'';

(2) அவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

''(அ) ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர், பெறுநர், நிறைவேற்றுநர் அல்லது ஒழிப்போன் என்பவராக உள்ள தனியாள் ஒருவர், அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளராக, பெறுநராக, நிறைவேற்றுநராக அல்லது ஒழிப்போனாக இந்தத் தனிப்பட்ட நிவாரணத்தைக் கழிப்பதற்கு உரித்துடைய வராதலாகாதென்பதுடன், அந்நிவாரண மானது முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகை களுக்கெதிராகக் கழிக்கப்படுதலுமாகாது என்பது தவிர,

(i) 2020, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னரான ஒவ்வொரு வரிமதிப் பீட்டாண்டுக்காகவும், 500,000 ரூபா; அத்துடன்

(ii) 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு கின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட் டாண்டுக்காவும், 3,000,000 ரூபா;

(ஆ) அப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில், “ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்கும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஒவ்வொரு வரிமதிப் பீட்டாண்டுக்கும், ஆனால் 2020, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர்,” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில், “அவ்வாண்டிற்காக” என்னும் சொல்லுக்குப் பதிலாக, “2019, திசெம்பர் 31 ஆந் தேதி வரையான ஆண்டுக்காக” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஈ) அப்பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில், “ஆண்டுக்கான” என்னும் சொல்லுக்குப் பதிலாக, “2019, திசெம்பர் 31 ஆந் தேதி வரையான ஆண்டுக்கான” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(உ) அப்பந்தியின் (உ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(ஊ) வதிவுள்ள தனியாளொருவரின் விடயத்தில், 2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஒரு

வரிமதிப்பீட்டாண்டுக்காக உறப்பட்ட 1,200,000 ரூபாவான மொத்தப் பணத்தொகை வரையிலான பின்வரும் செலவினம் :-

(i) மருத்துவக் காப்புறுதிக்கான உதவுதொகைகளுட்பட சுகாதாரச் செலவினம்;

(ii) அத்தகைய தனியாளினால் அல்லது அத்தகைய தனியாளின் பிள்ளைகளினது சார்பில், உள்நாட்டில் உறப்பட்ட தொழிற்கல்வி அல்லது வேறு கல்விசார் செலவினம்;

(iii) வீடமைப்புக் கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி;

(iv) தொழில்தருநரின் கீழ் அல்லது அவர்சார்பில் திட்டமொன்றுக்காக தவிர, ஊழியர் ஒருவரினால் ஏதேனும் உள்நாட்டு ஓய்வூதியத் திட்டத்துக்கு அளிக்கப்பட்ட உதவு தொகைகள்;

(v) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டதும் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான பங்குகள் அல்லது ஏதேனும் வேறு நிதிசார் சாதனங்கள் அல்லது (420 ஆம்

அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான திறைசேரி முறிகள் அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்காக உறப்பட்ட செலவினம்.";

(எ) வதிவிட தனியாளொருவரின் வளவுகளில் பொருத்தப்படுவதற்கானவையும் தேசிய நெய்யரியுடன் தொடுக்கப்பட்டவையுமான சூரியசக்திப் பனல்களைப் பெற்றுள்ள அவ்வதிவிட தனியாளின் விடயத்தில் அத்தகைய சூரிய சக்திப் பனல்களின் மீதான மொத்த செலவினம் வரை அல்லது அத்தகைய சூரியசக்திப் பனல்களைக் கொள்ளுவதற்கு பெறப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் வங்கியொன்றுக்கு செலுத்தப்பட்ட தொகைகள் வரை ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்கும் 600,000 ரூபா.".

முதன்மைச் சட்டவாக்கத்துக் கான ஆறாம் அட்டவணை யைத் திருத்துதல்

**56.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாவது அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 3 ஆம் பந்தியில், ''மூன்று ஆண்டுகளின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆறு ஆண்டுகளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வட்டவணையின் 8 ஆம் பந்தியில், ''மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக்காக, 15 ஆம் பிரிவின்கீழ்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "ஐந்தாண்டு காலப்பகுதியின் போது, 15 ஆம் பிரிவின் கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்";

(4) அவ்வட்டவணையின் 8 ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

**"வட்டி வீதம்**

*9. நூற்றியைம்பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் 2020, மாச்சு 1 ஆந் தேதியிலிருந்து 2020, செத்தெம்பர் 30 ஆந் தேதிவரையான காலப்பகுதியின்போது வருமதியாகவும் செலுத்தப் படற்பாலதானதாகவுமுள்ள ஏதேனும் கொடுப்பனவுக் கான வட்டி வீதம், பூச்சியம் சதவீதமாகவிருத்தல் வேண்டும்.''.*

**சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் செலவுகள்**

*10. (1) இரண்டாம் உட்பந்திக்கமைய, 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளின் போது 15அ என்னும் பிரிவின்கீழ் கழிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் செலவுகளின் மொத்தத் தொகையின் 100 சதவீதத்துக்குச் சமமான வரிமதிப்பீட்டாண்டொன்றிற் கான வியாபாரத்திலிருந்து ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடும்போது அவ்வாள் மேலதிக கழிப்பனவொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.*

*(2) ஓராம் உட்பந்தியின் கீழான மேலதிக கழிப்பனவு பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவாக்கப் படுதல் வேண்டும் :-*

(அ) கொடுப்பனவானது வரிசெலுத்துநரின் இணைந்துள்ள ஆளொருவராகவிராத ஆளொருவருக்கு செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) உள்ளக சந்தைப்படுத்தல், பணியாட்டொகுதியினரின் சம்பளங்கள், உள்ளக சந்தைப்படுத்தல் திணைக்களம் ஒன்றைப் பேணுவதன் மீதான செலவினம், கூட்டிணைப்பு சமூகப்பொறுப்பு முன்முயற்சிகளின் மீதான செலவினம் மற்றும் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் (1) ஆம் உட்பந்தியின் கீழ் மேலதிக கழிப்பனவு நோக்கத்துக்காக கவனத்திற் கொள்ளப்படுதலாகாது;

(இ) செலவினமானது உள்நாட்டு பெறுமதி சேர்ப்பின் 65 சதவீத்துடன் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாதல் வேண்டும்; அதன் கணக்கிடும் முறை ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்;

(ஈ) ஓராம் உட்பந்தியின்கீழான மொத்த மேலதிக கழிப்பனவு எவ்வரிமதிப்பீட்டாண்டிலும் 500,000,000 ரூபாவை விஞ்சுதலாகாது;

(உ) ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் வேறு பிரிவுகளின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, (1) ஆம் உட்பந்தியின் நோக்கத்துக்காக பதிவேடுகள், மூல ஆவணங்கள் மற்றும் அடிப்படை ஆவணங்களைப் பேணுவதற்கான தேவைப்பாடுகளை குறித்துரைத்தல் வேண்டும்.

**நிதிசார் ஆகுசெலவு**

11. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட் டாண்டின் போது (முன்னைய ஆண்டுகளில் எந்தத் தொகைகளின் கழிப்பனவுகள் மறுக்கப்படுகின்றதோ அத்தகைய தொகைகள் தவிர) உறப்பட்ட நிதிசார் ஆகுசெலவு, 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறையைப் பொருட் படுத்தாது கழிக்கப்படுதல் வேண்டும். அவ்வரி மதிப்பீட்டாண்டு 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆறாண்டு காலப்பகுதி நோக்கத்துக்காக ஏற்றங்கீகரிக்கப்படுதலாகாது.".

*குறித்துரைக் கப்பட்ட காலப் பகுதி களுக்கான வழிகாட்டு நெறிகளை வழங்கு வதற்கான ஆணையாளர் தலைமையதி பதியின் தத்துவம்*

**57.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து 2019, திசெம்பர் 31 ஆந் தேதி வரையான முதலாம் காலப்பகுதிக்காக மற்றும் 2020, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து 2020, மாச்சு 31 ஆந் தேதிவரையான இரண்டாம் காலப்பகுதிக்காக என்றவாறு இரண்டு வரி மதிப்பீட்டாண்டு காலப்பகுதிக்கு மேலானவற்றிற்காக ஒவ்வொரு மூலத்திலிருந்தான வரிமதிப் பிடப்படற்பாலதான வருமானத்தை (அல்லது நட்டங்களை) கணக்கிடுதல், தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகளினதும் நிவாரணங்களினதும் கழிப்பனவுகள், வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தைக் கணக்கிடுதல், விடயத்துக்கேற்ப தேவைப் படுத்தப்பட்ட சூழ்நிலைகளுக்காக தகவுக்கேற்ற அடிப்படையில் அல்லது உள்ளபடியான அடிப்படையில் மட்டும் பிரயோகிக்க வேண்டிய ஏற்புடையற்பாலதான வரி வீதங்கள் மற்றும் வரி வரவுகள் என்பவற்றைக் குறித்துரைத்து, 2020, மாச்சு மாதம் 31 ஆந் தேதி முடிவடையும் வரி மதிப்பீட்டாண்டிற்கான செலுத்தப் படற்பாலதான வருமான வரியைக் கணக்கிடும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான வழிகாட்டுநெறிகளை ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் ஏற்பாடகளைப் பயனுற நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கலாம்.

கொவிட் -19 இற்குப் பின்னரான பொருளாதார மீட்பை வசதிப் படுத்துவதற்கான வரி நிவாரண வழிமுறைகள்

**58.** (1) ஆணையாளர் தலைமையதிபதியின் பதிவேடுகளில் 195 ஆம் பிரிவில் பொருள் கோடல் செய்யப்பட்ட ஏதேனும் சிறிய நடுத்தர தொழில் முயற்சியினால் 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு செய்யப்பட்ட வரி மதிப்பீடு காரணமாக ஏதேனும் வரி நிலுவைகள் ஏற்பட்டிருந்து 2020, யூன் 26 ஆந் தேதியில் நிலுவையாகவுள்ள 2019, மாச்சு 31 ஆந் தேதி முடிவடையும் வரிமதிப்பீட்டாண்டு வரை (விபரத்திரட்டுக் களின்படியான வரிக் கொடுப்பனவுகளுக்காகச் செய்யப்பட்ட வரிமதிப்பீடுகள் தவிர்ந்த ஆனால் ஏதேனும் தண்டம் உட்பட) செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீடு:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படியும்; ஆனால்

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் ஏதேனும் வரிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய ஆளினால் உரியமுறையில் உரிமை கோரப்படும் எவையேனும் மீளளிப்புகளின் கழிப்பனவுகளுக்கமையவும்

செய்யப்பட்டிருப்பின், அத்தகைய நிலுவைகள் அத்தகைய வரி மதிப்பீடு காரணமாக எழுவதாயின், ஆணையாளர் தலைமையதிபதி 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய வருமான வரி நிலுவைகளை பதிவழித்தல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவுக்கமைய, அத்தகைய சிறிய நடுத்தர தொழில் முயற்சியினால் வருமானம் அல்லது ஏதேனும் கழிப்பனவு அல்லது நிவாரணத்தை வெளிவிடுவதில் மோசடி அல்லது வேண்டுமென்ற அசட்டை எதுவும் சம்பந்தப்படவில்லை எனவும் விபரத்திரட்டில்

வெளிப்படுத்தப்பட்ட வரியை செலுத்தியுள்ளது எனவும் உதவி ஆணையாளர் திருப்திப்படுகின்றவிடத்து, 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடையும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அச்சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழான சுய வரிமதிப்பீட்டை உதவி ஆணையாளர் திருத்துதலாகாது.

(3) ஆணையாளர் தலைமையதிபதி –

(அ) 2021, யூன் 30 ஆந் தேதிக்கு முன்னர், 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கான தனது வருமானம் பற்றிய விபரத்திரட்டை கோப்பிடுகின்ற; அத்துடன்

(ஆ) 2021, யூன் 30 ஆந் தேதிக்கு முன்னர் 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டுக்கான, முதன்மைச்சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வரிமதிப்பீட்டின் மீது செலுதப்படற்பாலதான வரியை கொடுப்பனவு செய்கின்ற,

ஆளொருவருக்கெதிராக ஏதேனும் தண்டத்தை விதித்தலாகாது அல்லது முதன்மைச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் XVIII இன்கீழ் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை தொடங்குதலாகாது.

கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்

**59.** பட்டியல் அ இன் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட நேரொத்த பிரிவுகளுக்கு, இத்திருத்தச் சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அப்பட்டியலின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்படும் திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும், அப்பட்டியலின் நிரல் III இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய தேதிகளில் நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**60**. இத்திருத்தச் சட்டத்தில் தரப்பட்டுள்ள பட்டியல் ஆ இன் நிரல் III இல் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய தேதிகளில் தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது இத்திருத்தச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு வருமான வரியை சேகரித்துள்ள எவரேனும் ஆள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேகரிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப் படுகின்றதாகவும் எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதலும் வேண்டும் அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய சேகரிப்பு தொடர்பில் எல்லா குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கு எதிராக இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றார்.

செல்லுபடியாக்கல்

**61**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல்

**"பட்டியல் அ"** (பிரிவு 1)

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| இச்சட்டத்தின் பிரிவிலக்கம் | திருத்தப்படுகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவிலக்கம் |
| 6 | 11 |
| 7 | 14 |
| 8 | 15அ |
| 10 | 18 |
| 11 | 19 |
| 13 | 36 |
| 14 | 38 |
| 17 | 60 |
| 18 | 62 |
| 19(2) | 66(3) |
| 34(2) | 93(3) |

| நிரல் I | நிரல் II |
|---|---|
| இச்சட்டத்தின் பிரிவிலக்கம் | திருத்தப்படுகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவிலக்கம் |
| 36 | 95 |
| 37 | 103 |
| 38 | 113 |
| 39 | 120 |
| 40 | 126 |
| 42(2) மற்றும் 42(3) | 139(5) மற்றும் 139(6) |
| 43 | 140 |
| 45(2) | 158(2) |
| 47 | 190 அ |
| 48(4), (7) மற்றும் (10) | 195 |
| 51(1) (ஊ) | முதலாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (5) ஆம் உட்பிரிவு |
| 51(4) (இ) | முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின் (2 அ) என்னும் உட்பந்தியின் (ஓ) மற்றும் (ஔ) என்னும் விடயங்கள் |
| 51(4)(ஈ) | முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின் (5) ஆம் உட்பந்தி |
| 51(9) | முதலாம் அட்டவணையின் 11 ஆம் பந்தி |
| 52(1)(இ) | இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (9) ஆம் உட்பந்தி |
| 52(2) | இரண்டாம் அட்டவணையின் 2 ஆம் பந்தி |
| 52(3) | இரண்டாம் அட்டவணையின் 3 ஆம் பந்தி |
| 53(2) | மூன்றாம் அட்டவணையின் (ஏஏ) என்னும் பந்தி; |
| 53(3) | மூன்றாம் அட்டவணையின் (ஐ) என்னும் பந்தியின் (V) மற்றும் (vi) ஆம் உட்பந்திகள்; |

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| இச்சட்டத்தின் பிரிவிலக்கம் | திருத்தப்படுகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவிலக்கம் |
| 53(5) | மூன்றாம் அட்டவணையின் (ஔ ஔ) மற்றும் (ஔ ஔ ஔ) என்னும் பந்திகள்; |
| 53(9) | மூன்றாம் அட்டவணையின் (ணண) என்னும் பந்தி; |
| 53(10) | மூன்றாம் அட்டவணையின் பந்தி (ப) மற்றும் பந்தி (ய) இன் (V) மற்றும் (vi)ஆம் உட்பந்திகள்; |
| 54(1) | நான்காம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் உள்ள பட்டியல் |
| 54(2) (அ) | நான்காம் அட்டவணையின் 2 ஆம் பந்தியின் (3) உட்பந்தியில் உள்ள பட்டியல்; |
| 54(3) | நான்காம் அட்டவணையின் 4 ஆம் பந்தி |
| 55(1) (ஆ) | ஐந்தாம் அட்டவணையின் 1 ஆம் |
| | பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகள் |
| 55(2) (உ) | ஐந்தாம் அட்டவணையின் 2 ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்தி |
| 56 (4) | ஆறாம் அட்டவணையின் 10 மற்றும் 11 ஆம் பந்திகள் |

**"பட்டியல் ஆ"** (பிரிவு 59)

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவிலக்கம் | திருத்தப்படுகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவிலக்கம் | நடைமுறைக்கு வரும் தேதி |
| 2 | 5 | 01.04.2018 |
| 3 | 6 | 01.04.2018 |
| 4 | 9 | 01.04.2018 |
| 5 | 10 | 01.04.2018 |
| 9 | 16 | 01.04.2018 |
| 12 | 20 | 01.04.2018 |
| 15 | 53 | 01.01.2020 |
| 16 | 55 | 01.01.2020 |
| 19(1) மற்றும் 19(3) | 66(2) மற்றும் 66 (4) | 01.04.2018 |
| 20 | 68 | 01.04.2018 |
| 21 | 70 | 01.04.2018 |
| 22 | 75 | 01.04.2018 |
| 23 | 76 | 01.04.2018 |
| 24 | 77 | 01.04.2018 |
| 25 | 78 | 01.04.2018 |
| 26 | 83 | 01.01.2020 |
| 27 | 83அ | 01.04.2020 |
| 28 | 84 | 01.01.2020 |
| 29 | 84அ | 01.04.2020 |
| 30 | 85 | 01.01.2020 |
| 31 | 87 | 01.04.2018 |
| 32(1) (ஆ) மற்றும் 32(3) | 88(1) (ஈ) மற்றும் 88 (3) | 01.04.2018 |
| 32(1) (அ) மற்றும் 32(2) | 88(1) மற்றும் 88(1அ) | 01.01.2020 |
| 33(1) மற்றும் 33 (2) | 90 (1) மற்றும் 90 (2) | 01.04.2018 |
| 33 (3) மற்றும் 33 (4) | 90 (3) மற்றும் 90 (5) | 01.04.2020 |
| 34 (1) | 93 (2) | 01.04.2018 |
| 35 | 94 | 01.04.2019 |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவிலக்கம் | திருத்தப்படுகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவிலக்கம் | நடைமுறைக்கு வரும் தேதி |
| *41* | *129* | *01.04.2018* |
| *42(1)* | *139 (3)* | *01.04.2018* |
| *44* | *157* | *01.04.2018* |
| *45(1)* | *158(1)* | *01.04.2018* |
| *46* | *159 (1) மற்றும் 159(2)* | *01.04.2018* |
| *48(1), (3), (8) மற்றும் (9)* | *195* | *01.04.2018* |
| *48(2)* | *195* | *01.04.2019* |
| *48(5)* | *195* | *01.01.2020* |
| *48(6)* | *195* | *01.04.2020* |
| *49* | *201(2)(ஆ)* | *01.04.2018* |
| *50* | *203* | *01.04.2018* |
| *51(1)(அ),(ஆ),(இ) மற்றும் (ஈ)* | முதலாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் முறையே (1), (1அ), (2) மற்றும் (3) ஆம் பந்தி | *01.01.2020* |
| *51(2)* | முதலாம் அட்டவணையின் 2 ஆம் பந்தி | *01.01.2020* |
| *51(3)* | முதலாம் அட்டவணையின் 3ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தி | *01.01.2020* |
| *51(4)(அ)* | முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தி | *01.01.2020* |
| *51(4)(ஆ)* | முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தி | *01.01.2020* |
| *51(4)(இ)* | முதலாம் அட்டவணையின் (ஓ) மற்றும் (ஔ) என்னும் விடயங்கள் தவிர்ந்த, 4 ஆம் பந்தியின் 2அ என்னும் உட்பந்தி | *01.01.2020* |
| *51(5)(அ)* | முதலாம் அட்டவணையின் 5 ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தி | *01.01.2020* |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவிலக்கம் | திருத்தப்படுகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவிலக்கம் | நடைமுறைக்கு வரும் தேதி |
| *51(6)* | முதலாம் அட்டவணையின் 7 ஆம் பந்தியின் (1) ஆம் மற்றும் (3) ஆம் உட்பந்திகள் | *01.01.2020* |
| *51(8)* | முதலாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் 1 ஆம் உட்பந்தி | *01.01.2020* |
| *51(1)(உ)* | முதலாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (4) ஆம் உட்பந்தி | *01.04.2019* |
| *51(5)(ஆ)* | முதலாம் அட்டவணையின் 5 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தி | *01.04.2018* |
| *51(7)* | முதலாம் அட்டவணையின் 8 ஆம் பந்தி | *01.04.2018* |
| *51(9)* | முதலாம் அட்டவணையின் 12 ஆம் உட்பந்தி | *01.04.2020* |
| *52(1)(அ) மற்றும் (ஆ)* | இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (2), (3), (4) மற்றும் (6) ஆம் உட்பந்திகள் | *01.04.2018* |
| *53(1)* | மூன்றாம் அட்டவணையின் (ஈ) என்னும் உட்பந்தி | *01.04.2018* |
| *53(3)* | மூன்றாம் அட்டவணையின் (ஐ) என்னும் பந்தியின் (i) ஆம் மற்றும் (ii) ஆம் உட்பந்திகள்; | *01.04.2018* |
| *53(4)* | மூன்றாம் அட்டவணையின் (ஓ) மற்றும் (ஔ) என்னும் பந்திகள்; | |
| *53(8)* | மூன்றாம் அட்டவணையின் (ண) என்னும் பந்தி; | *01.04.2018* |
| *53(10)* | மூன்றாம் அட்டவணையின் (ந) என்னும் பந்தி | *01.04.2018* |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவிலக்கம் | திருத்தப்படுகின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவிலக்கம் | நடைமுறைக்கு வரும் தேதி |
| 53(3) | மூன்றாம் அட்டவணையின் (ஐ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தி; | 01.01.2020 |
| 53(6) | மூன்றாம் அட்டவணையின் (ச) என்னும் பந்தி; | 01.01.2020 |
| 53(7) | மூன்றாம் அட்டவணையின் (சச) என்னும் பந்தி; | 01.01.2020 |
| 53(10) | மூன்றாம் அட்டவணையின் (ப) என்னும் பந்தியின் (ii), (iii) மற்றும் (iv) ஆம் உட்பந்திகள்; மூன்றாம் அட்டவணையின் (ம) என்னும் பந்தி | 01.01.2020 |
| 53(3) | மூன்றாம் அட்டவணையின் (ஐ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தி | 08.04.2020 |
| 53(10) | மூன்றாம் அட்டவணையின் (ப) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தி | 01.04.2019 |
| 54(2)(ஆ) | நான்காம் அட்டவணையின் 2 ஆம் பந்தியின் (4) ஆம் உட்பந்தி | 01.04.2018 |
| 55(1)(அ) | ஐந்தாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தி | 01.04.2019 |
| 55(2) | ஐந்தாம் அட்டவணையின் 2 ஆம் பந்தி (உட்பந்தி (எ) இனைத் தவிர்ந்த) | 01.01.2020 |
| 56 (1), (2) மற்றும் (3) | ஆறாம் அட்டவணையின் (2), (3) மற்றும் (8) எனும் பந்திகள் | 01.04.2018 |
| 56 (4) | ஆறாம் அட்டவணையின் (4) ஆம் பந்தி | 01.03.2020 |
| 57 | புதிய பிரிவு | 01.04.2019 |
| 58 | புதிய பிரிவு | 26.06.2020 |